மலர்-5 இதழ்-117 ஜுலை 1-15 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

**உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்**



ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

மாதமிருமுறை

**இயற்கையை இறைவனாக போற்றி வாழ்ந்த வேதகால மக்கள்**

# முழங்கால் வலி தீர்க்கும் முருகன்

e-magazine






## ஆரோக்கியத்தை தரும் கோவில்கள்

1. தன்வந்திரி திருக்கோவில், ராமநாதபுரம், கோவை.
2. பவஔஷதீஸ்வரர் திருக்கோவில், திருத்துறைப்பூண்டி.
3. பிரசன்னவெங்கடேச பெருமாள் திருக்கோவில், குணசீலம்.
4. மருந்தீஸ்வரர் திருக்கோவில், திருவான்மியூர்.
5. மகா மாரியம்மன் திருக்கோவில், வலங்கைமான்.
6. வைத்தியநாதசுவாமி திருக்கோவில், மடவார்விளாகம், ஸ்ரீவில்லிபுத்தூர்.
7. வைத்தியநாதசுவாமி திருக்கோவில், வைத்தீஸ்வரகோவில்.

## கடன் பிரச்சனைகள் தீர்க்கும் கோவில்கள்

1. அன்னமலை தண்டாயுதபாணி திருக்கோவில், மஞ்சூர், ஊட்டி
2. கருமாரியம்மன் திருக்கோவில், திருவேற்காடு.
3. சாரபரமேஸ்வரர் திருக்கோவில், திருச்சேறை, கும்பகோணம்.
4. சிவலோகதியாகர், நல்லூர்பெருமணம், ஆச்சாள்புரம், சீர்காழி.
5. திருமலைதிருப்பதி ஸ்ரீநிவாசபெருமாள் திருக்கோவில், திருமலை.

## எதிரி பயம் போக்கும் திருக்கோவில்கள்

1. அங்காளம்மன் திருக்கோவில், மேல்மலையனூர்.
2. அங்காளபரமேஸ்வரி அம்மன் திருக்கோவில், பழைய வண்ணாரப்பேட்டை,சென்னை.
3. காலபைரவர் திருக்கோவில், கல்லுக்குறிக்கி. கிருஷ்ணகிரி.
4. காளமேகப்பெருமாள் திருக்கோவில், திருமோகூர்.
5. காளிகாம்பாள் திருக்கோவில், தம்புசெட்டித்தெரு, சென்னை.
6. தட்சிணகாசி உன்மத்த காலபைரவர் திருக்கோவில், அதியமான்கோட்டை.
7. தில்லைகாளியம்மன் திருக்கோவில், சிதம்பரம்.
8. பிரத்யங்கராதேவி திருக்கோவில், அய்யாவாடி. கும்பகோணம்.
9. மாசாணியம்மன் திருக்கோவில், ஆணைமலை.
10. முனியப்பன் திருக்கோவில், பி.அக்ரஹாரம், தர்மபுரி.
11. ரேணுகாம்பாள் திருக்கோவில், படவேடு.
12. வெட்டுடையார் காளியம்மன் திருக்கோவில், கொல்லங்குடி

# சித்தர் பட்டம்

## விற்பனைக்கு

## amazon ல் விற்றாலும் ஆச்சரியமில்லை

சமீபத்தில் ஒரு அன்பர் அனுப்பிய செய்தியை அப்படியே உங்களுக்கு தருகிறேன். அவர் வேதனை நியாயமானதாகவே உள்ளதால், ஆன்மிகத்தில் நாட்டமுள்ளவர்கள் அவசியம் படியுங்கள்...

சில நாட்களுக்கு முன்பு facebookல் "நீங்கள் சித்தராக வேண்டுமா? மூன்று மாத கால பயிற்சி ருபாய் 10,000" என்று ஒரு விளம்பரம் கண்டேன் அதன் விளைவுதான் இப்புலம்பல்.

சில காலமாக இதுபோன்று அதிகமாக பரவி வருகிறது.

வாசி பயிற்சி

மூச்சு பயிற்சி

லம்பிகா பயிற்சி

மாந்திரீகம் பயிற்சி

இப்போது சித்தராக பயிற்சி என்று இறுதி கட்டத்திற்கே வந்து விட்டார்கள்.

பல பிறவிகளின் பயன் தான் இந்த அறிய மனித பிறவி, அப்படி என்றால் சித்த நிலையை அடைய பணம் மட்டும் போதுமா என்ன?

பணம் வாங்கி கற்று கொடுப்பவர்கள் எல் லாம் குருவாகிவிட முடியாது.

ஒரு மனிதன் பக்குவநிலை அடையும் நிலை யில் திருவே குருவாக அவனை வந்தடைவார்.

அதுவரை நல்லதை நினைத்து நல்லதையே செய்யுங்கள், பணம் கொடுத்து எதையும் கற்று விடாலாம் என்று நினைப்பவர்களுக்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சும்.

உண்மையான குரு உங்கள் ஆன்ம வளர்ச் சியை மட்டுமே எதிர்பார்ப்பார்.

உங்கள் காலம் அறிந்து குருவே உங்களிடம் வந்தடைவார்.

நீங்களாக குருவை தேர்ந்தெடுத்தால், சொன்னதை செய்யும், நூலில் ஆடும் பொம்மைபோல தான் உங்களை அவர்கள் பயன்படுத்துவார்கள்.

அவர்கள் கையில் பொம்மையாக நீங்கள் இருக்கும் வரையில், அவர்கள் சொன்னதற்கெல்லாம் ஆட்படுவீர்கள், நூலை விட்டாலோ அல்லது பிடித்தவர் இந்த உலகத்தை விட்டாலோ பொம்மை செயலற்று போய்விடும்.

ஆகவே பக்தியை இறைவனிடம் வையுங்கள் உங்கள் உடல் வளர உணவு கொடுப்பவனுக்கு உங்க ஆன்மா வளர என்ன கொடுக்கனும் எப்போது கொடுக்கணும் யார் மூலம் கொடுக்கனும் என்று எல்லாம் தெரியும்."

இவ்வாறு அந்தஅன்பர் கூறிய வார்த்தை உண்மை தான்.

தற்போது ஆன்மிகம் மிகப் பெரிய கார்ப்பரேட் சந்தையாக மாறி வருமானம் கொழிக்கும் இடமாக விளங்குகிறது.

இந்தசந்தையின் உச்சகட்டம் தான் மேற்கண்ட அன்பரின் புலம்பலுக்கு காரணமான விளம்பரம்.

இதன் அடுத்த பரிணாம வளர்ச்சி கண்டிப்பாக அமேசானில் கூட சித்தர் பட்டம் விற்கும் நிலை ஏற்படலாம்.

**இதுபோன்ற கூட்டத்திடமிருந்து சற்று உஷாராக இருப்பதே நலம். இறைவனை அன்பால் அடையலாம், பணத்தால் கண்டிப்பாக அடைய முடியாது.**



www.aanmeegamalar.com




# வெளவால், பல்லி, பாம்பு வடிவில் உத்தரவு தரும் சிவன்

திருக்கழுக்குன்றம் திருவானைக்கோயில்






திருவானைக்கோயில் எங்கே உள்ளது எனக் கேட்டால் எல்லோரும் திருச்சிக்கு அருகில் உள்ள கோயில் என்று கூறுவார்கள். திருச்சிக்கு அருகே உள்ளது. திருவானைக்காவல்.. ஆனால் இது திருவானைக்கோயில்.

திருக்கழுக்குன்றம் வட்டத்தில் இது அமைந் துள்ளது. திருவானைக்கோயில் புராதனமான ஊராகும். இங்கு திருவாலீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. புராதன கதையில் வாலி இறைவனை வணங்கியதால் இங்குள்ள இறைவன் திருவாலீஸ்வரர் என அழைக்கப்படுகின்றார்.

**ஊர் அமைவிடம்:**

திருக்கழுக்குன்றதிலிருந்து பொன்விளைந்த களத்தூர் சென்று அங்கிருந்து செங்கல்பட்டு செல்லும் சாலையில் 2 கிலோமீட்டர் தூரம் சென்றதும் சிறிது தூரத்தில் வலதுபுறம் உள்ள மலைகளுக்கு நடுவில் சென்றால் இருளர் காலணிக்கு அடுத்து அமைந்துள்ளது.

திருக்கழுக்குன்றதிலிருந்து நடுவில் சென்றால் இருளர் காலணிக்கு அடுத்து அமைந்துள்ளது. திருக்கழுக்குன்றதிலிருந்து செங்கல்பட்டு செல்லும் சாலையில் பில்லேரிமேடுவில் பிரியும் சாலையில் சென்றால் சேகண்டி கிராமம் தாண்டி யதும் இந்த ஊர் வருகின்றது.

**கல்வெட்டில் உள்ள தகவல்:**

தூங்கானை மாட வடிவில் உள்ள இந்த




கோயில் பிற்கால சோழர் காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. விக்கிரம சோழனுடைய கல்வெட்டு கி.பி.1127 திருவாலீஸ்வரர் கோயிலை திரு வாலக்கோயில் என்கின்றது.

இரண்டாம் குலோத்துங்கனுடைய அரசு அதிகாரி அநபாய திருக்கழுக் குன்றம்: திருவானைக்கோயில்.

மூவேந்த வேளான் என்பவன் உழுலூர் என்கின்ற ஊரின் ஒரு பகுதியை அரும்பாக்கத்துடன் இணைத்து அநபாயநல்லூர் என மாற்றி வழிபாட்டுக்காகஅதனை அளித்துள்ளான். இந்த கோயிலில் 16 கல்வெட் டுக்கள் உள்ளன. கி.பி.1128ல் சந்திரசேகர மூர்த்தி வழிபாட்டுக்கு சிறுதண்டல் கிராமம் வழங்கப்பட்டுள்ளது.

கி.பி.1220–ல் சென்னை மயிலாப்பூர் விய ாபாரி ஒருவர் இங்கே விளக்கெரிக்க வழி செய்துள்ளான். விஜயநகர மன்னரான கம் பண்ணன் கோயில் திருப்பணி செய்து பங்குனி விழா நடத்த ஏற்பாடு செய்துள்ளான்.

லிங்கராயன் இந்த திருத்தொண்டில் 1365–ஆம் ஆண்டில் ஈடுபட்டுள்ளான். இரண்டாம் அரிகரன் காலங்களிலும் கோயிலுக்கு தானங்கள் அளிக்கப்பட்டுள்ளன. காங்கேய பல்லவராயர் தன் மகள் பொன்னியார் நலத்திற்குதானங்கள் அளித்துள்ளார். குலோத்துங்க சோழ திருநீற் றுச் சோழநல்லூர் என்ற ஊர் புதியதாக உருவாக் கப்பட்டு இந்த கோயிலுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நென்மேலி என்கின்ற கிராமத்தின் ஒரு பகுதியே இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. காளாமுகம் என்ற சைவத்தின் பிரிவைச் சார்ந்த கோமடத்து ஞானராசி பண்டிதர் மற் றும் சைவராசி பண்டிதர் பற்றிய விவரங்கள் கல்வெட் டில் உள்ளது.


வேலன்

சென்னை திருவெற்றியூர் போன்று திருவானைக்கோயிலிலும் காளாமுகப்பிரிவினர் தங்கியிருந்த ஊர் திருவானைக்கோயில் எனலாம். இந்த ஊர் நாட்டியபெண்கள் மற்றும் கைக்கோளர்களுக்கு மதுராந்த கத்தின் வடவெல்லையான வீட்டுரில் வீட்டு மனைகள் அளிக்கப் பட்டுள் ளன.

முதல் இராஜநாராயண சம்புவ ராயன் என்ற மன்னன் புண்டரீக நல்லூரைக்கைக்கோளர்களுக்கு மானியமாக அளித்துள்ளான். புண்டரீக நல்லூர் நரியஞ்சேரி என்றும் இவ்வூர் அழைக் கப்பட்டுள்ளது. சுந்தரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் இவ்வூர் கோயிலில் விளக்கெரிக்க 6 பசுக்களை புஷபகிரி ஜீயர் அளித்துள்ளார். விஜயநகர வேந்தரான கிருஷ்ணதேவராயரின் முகவரான மூட்டுக்கனகராயன் என்பவர் கோயிலில் திருவிழாக்கள் நடைபெற ஏற்பாடு செய்துள்ளதை செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

## ஆலய அமைப்பு:

ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட கோயில் என்பது கோயினை பார்க்கும் சமயம் நமக்கு தெரியவருகின்றது. ஆலயத்திற்கு வெளியே வினாயகர் சிலையும் ஜெஷ்டா தேவி சிலையும் அமைந்துள்ளது.இறைவன் பெயர் திருவாலீஸ்வரர். இறைவி பெயர் திரிபுரசுந்தரி..இறைவன் கிழக்கு பார்த்து உள்ளார். இறைவி தெற்கு பக்கம் பார்த்து உள்ளார். கிழக்கு பக்க வாசல் கருங்கல் ஜன்னலால் அமைக்கப்பட்டுள்ளது. ஜன்னலுக்கு வெளியே நந்தி உள்ளது ராஜநந்தி என அதனை அழைக்கின்றனர்.

கோயிலுக்கு தெற்கு பார்த்த வாசல் நாம் தெற்கு பார்த்த வாசல்வழியே உள்ளே நுழையவேண்டும். கருவரையின் முன்பு வினாயகர் மற்றும்






முருகர் சிலைகள் அமைந்துள்ளன. விநாயகர் வித்தியாசமான தோற்றத்தில் அமைந்துள்ளார். இறைவன் சுயம்பு லிங்கம். லிங்கம் எதிரே சிறிய நந்தி – பலிபீடம் அமைந்துள்ளது.

திரிபுரசுந்தரி அம்மன் 4 அடி உயரத்தில் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கின்றார்.

கருவறையை சுற்றி வருகையில் விநாயகர், தட்சிணாமூர்த்தி. விஷ்ணு, பிரம்மா ,துர்கை சிலைகள் அமைந்துள்ளன.

ஒவ்வொரு சிலையின் கீழேயும் பக்கவாட்டிலும் அழகிய சிறிய சிற்பங்கள் அமைந்துள்ளன. மகளிர் சிறப்பினை – இறைவழிபாட்டை விளங்குவதாக அவை உள்ளன.

வெளிபிரகாரம் இரண்டு அடி உயரத்தில் இரண்டு அடுக்காக அமைந்துள்ளது. இறைவனுக்கு அருகிலும் சுற்றி வரலாம். மேலே உள்ள பிரகாரத்திலும் சுற்றிவரலாம். கருவறையை சுற்றி நிறைய கல்வெட்டுக்கள் உள்ளன. தமிழில் ஓரளவு புரியும் அளவில் அமைந்துள்ளது சிறப்பாகும். துர்கைஅம்மன் அருகில் வேப்பமரம் அமைந்துள்ளது.

## ஆலய சிறப்புகள்:

கிழக்கு பக்கம் அமைந்துள்ள ஜன்னல் சாரளத்தின் வழியே சூரிய வெளிச்சம் லிங்கத்தின் மீது விழும் நிகழ்வு வருடத்திற்கு இரண்டு முறை நடைபெறுகின்றது. அதுபோல விநாயகர் மீதும். முருகப்பெருமான் மீதும் சூரிய கதிர்கள் விழுகின்றன.

மாசி மாதம் வருகின்ற பௌர்ணமியில் அம்மன் மீது சூரிய கதிர்விழுகின்றது. வருடத்தின் குறிப்பிட்ட நாளில் அனைத்து சிலைகள் மீதும் சூரியஒளி பாய்கின்றது. வழக்கமாக கோயில்களில் நாம் நினைத்தது பலிக்குமா என பார்க்க குங்குமம்.விபூதி பெட்டலம் மடித்து ஸ்வாமிபாதத்தில்வைத்து எடுத்து வந்து கொடுப்பார்கள்.

நாம் எதை நினைத்து எடுக்கின்றோமோ அது வந்தால் ஸ்வாமி நமக்கு உத்தரவு கொடுத்துவிட்டதாக நம்புவோம். சில ஆலயங்களில் பூ வைத்து பார்பார்கள். இந்த ஆலயத்தில் நாம் வேண்டுதல் சொன்னால் அர்ச்சகர் நம்மை கருவறையில் எதிரில் விட்டு விட்டு வெளியில் சென்று விடுகின்றார். நாம் இறைவனை மனமுருக வேண்டிக்கொள்ளலாம். நாம் எண்ணிய எண்ணம் பலிக்குமானால் கருவறையிலிருந்து வௌவால் பறந்து வருகின்றது. சில சமயம் பல்லி உள்ளே இருந்து ஓடிவருகின்றது.

சிலருக்கு பாம்பு உருவில் இறைவன் வந்து உத்தரவு கொடுத்ததாக அர்ச்சகர் தெரிவித்தார். நான் இறைவனை வணங்கிய சமயம் வௌவால் உள்ளே இருந்து பறந்து வந்தது. ஜீவ ராசிகள் வருவது மூலம் இறைவன் உத்தரவு கொடுத்ததை நாம் உறுதி படுத்திக்கொள்ளலாம்.

கோயிலில் குறிப்பிடதக்க விஷேஷம் என்னவென்றால் இங்குள்ள இறைவனுக்கு சுத்தமான பசும்பாலினால் காலை மற்றும் மாலையில் அபிஷேகம் நடைபெறுகின்றது. ஒவ்வொரு பிரதோஷ வழிபாடு, பௌர்ணமி – அமாவாசை வழிபாடு, கிருத்திகை வழிபாடு மற்றும் அனைத்து விசேஷ நாட்களிலும் சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரங்கள் உண்டு.

கோயில் சிறியதாக இருந்தாலும் மன அமைதி பெரியதாக நமக்கு கிடைக்கின்றது. ஆலய அர்ச்சகர் தொலைபேசி எண்:9952404422 நேரம் கிடைக்கும் சமயம் ஆலயம் சென்றுவாருங்கள்.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

# பணத்திற்கும், ஆடம்பரத்திற்கும் கடவுள் செவிசாய்ப்பதில்லை

# அன்புக்குகே இறைவன் அடிமை

முன்பு ஜாதி பாகுபாடு காட்டி பக்தர்களிட மிருந்து கடவுளை பிரித்து வைத்த சமுதாயம், தற்போது பணம், பதவியை காரணம் காட்டி பக்தர்களிடமிருந்து கடவுளை பிரித்து வைப்பது வேதனைதான்.

எளிமையான பக்தர்கள் அவமதிக்கப்படுவதும், பணமும், பதவியும் உள்ளவர்களை தேடிச்சென்று பூர்ண கும்ப மரியாதை கொடுப்பதும் வாடிக்கையாக உள்ளது.

இறை தரிசனத்தை 50, 100, 500, 1000 என்று விலை நிர்ணயித்து, இறைவன் சன்னதிக்கு அருகில் கொண்டு சென்று தரிசனம் கொடுப்பதும்,ஏழை பக்தர்களை 100 அடி தள்ளி நின்று தரிசனம் செய்யவைப்பது தீண்டாமையைவிட மிகக் கொடுமையானதாகும்.

ஆணவத்தையும், ஆடம்பரத்தையும், அகம்பாவத்தையும் கோவிலுக்கு வெளியே விட்டுவிட்டு, இறைவனை தரிசிக்க வேண்டும் என்பதற்கு எத்தனையோ புராண கதைகள் உண்டு.

கோவிலுக்கு சென்று பொறுமையாக இறைவனை தரிசிக்க முடியாதவர்கள் ஏன் கோவிலுக்கு செல்ல வேண்டும்?......................

உண்மையில் இறைவன் இது போன்ற ஆடம்பரக் கூட்டத்தை தீண்டுவதில்லை.

இதற்கு முத்தாய்ப்பான வரலாற்று நிகழ்வை பார்ப்போம்...

மூட்டை தூக்கும் தொழிலாளி



யான ராமதேவ் தினமும் மாலையில் நீராடி, ஸ்ரீபாண்டுரங்கனைப் பாடி பூஜித்து, பழம் கற்கண்டுகளை பக்தர்களுக்கு வழங்கி வந்தான்.

சம்பாதிப்பதில் ஒரு பங்கை உண்டியலில் சேமித்து வைத்து, வருடா வருடம் பண்டரிபுரம் சென்று, விட்டலனுக்கு வஸ்திரம் சமர்ப்பிப்பது வழக்கம்.

உண்டியல் பணத்தை எண்ணினார் ராமதேவன்.

இதில் விட்டலனுக்கு நூல் வேஷ்டியும் அங்கவஸ்திரம் மட்டும்தான் வாங்க முடியும் என வருந்தினார். பிறகு மனதைத் தேற்றியபடி, நூல் வேஷ்டி மற்றும் அங்க வஸ்திரத்தை வாங்கிக் கொண்டு பண்டரிபுரம் நோக்கி நடந்தார்.

வழியில், அழுக்கு வேஷ்டியும் கிழிந்த துண்டுமாய் பெரியவர் ஒருவர் பின்னே வந்தார்.

ராமதேவிடம் அவர், "தாங்கள் எங்கு செல்கிறீர்கள்?" என்று கேட்டார். உடனே அவன், "விட்டலனை தரிசிக்க பண்டரிபுரம் செல்கிறேன் சாமி" என்றார் உற்சாகத்துடன்.

அப்படியா! நானும் அங்குதான் செல்கிறேன். பண்டரிபுரம் செல்வதற்கு, குறுக்குப் பாதை ஒன்று உள்ளது. எனக்கு அந்த வழி தெரியும். சந்திரபாகா நதியில் குளித்து விட்டு, மாலையில் விட்டலனை தரிசிக்கலாம்" என்று ராமதேவனை அழைத்தார் பெரியவர். அவனும் சம்மதித்தான்.

பின்னர் இருவரும் பேசிக் கொண்டே வந்ததில், களைப்பே தெரியவில்லை. பெரியவர் சொன்னபடி மாலை வேளை துவங்கும் முன்பே கோயிலுக்கு அருகில் உள்ள சந்திரபாகா நதிக் கரையை அடைந்தனர்.

பண்டரிநாதனுக்கு சமர்ப்பிப்பதற்காகக் கொண்டு வந்த வஸ்திரத்தை ஒரு பையிலும், தான் குளித்து விட்டு உடுத்திக் கொள்ளும் ஆடையை வேறொரு பையிலுமாக வைத்திருந்தார் ராமதேவ்.

இரண்டு பைகளையும் கரையில் வைத்து விட்டுக் குளிக்கச் சென்றார்.

பெரியவரும் நீரில் இறங்கினார்.

தான் அணிந்திருந்த வேஷ்டியை, அங்கு இருந்த கல்லில் அடித்துத் துவைத்து, அலசி, கரையில் காய வைத்தார் ராமதேவ். பெரியவரோ, துவைப்பதற்கு சிரமப்பட்டார். இதை அறிந்த ராமதேவ், அவரது வேஷ்டியை வாங்கித் துவைத்து, நீரில் அலசிப் பிழிந்தார்.

பிறகு வேஷ்டியை காய வைக்க விரித்தவர், அதிர்ந்து போனார். ஏற்கெனவே கிழிந்திருந்த வேஷ்டி, இப்போது பல இடங்களில் கிழிந்திருந்தது. பெரியவரிடம் மாற்று வேஷ்டி கூட இல்லை.




பெரியவர் அப்போதே சொன்னார் 'கடந்த வருடம் அன்பர் ஒருவர் கொடுத்த வேஷ்டி இது. ரொம்பவே கிழிந்து விட்டது. ஜாக்கிரதையாக துவையுங்கள் என்று! இப்போது இந்த வேஷ்டி பாழாகி விட்டதே! குளித்து விட்டு எதை உடுத்துவார்? நம்மிடமும் ஒரே ஒரு மாற்று வேஷ்டிதானே உள்ளது?

புதிதாக வேஷ்டி வாங்கித் தரலாம் என்றால் பணமும் இல்லையே? பாண்டுரங்கா!! என்ன செய்வது என்று புலம்பினார் ராமதேவ்.

என்ன? ராமதேவா! என் வேஷ்டி காய்ந்து விட்டதா?" என்று கேட்டபடி கரைக்கு வந்தார் பெரியவர். இடுப்பில் துண்டு மட்டுமே உடுத்தி இருந்தார்.

பெரியவரே! உங்கள் வேஷ்டியை அடித்துத் துவைத்ததில், நார்நாராகக் கிழிந்து விட்டது. என்னை மன்னியுங்கள் என்றார் ராமதேவ்.

இதைக் கேட்டதும் இப்போது என்ன செய்வது? என்று கவலைப்பட்டார் பெரியவர்.

வருந்த வேண்டாம் சுவாமி. பாண்டுரங்கனுக்கு சமர்ப்பிக்கப் புது வேஷ்டியும் அங்கவஸ்திரமும் எடுத்து வந்திருக்கிறேன். இதை உடுத்திக் கொள்ளுங்கள்" என்று பாண்டுரங்கனுக்காக வாங்கிய வேஷ்டி அங்கவஸ்திரத்தைப் பையில் இருந்து எடுத்துக் கொடுத்தார் ராமதேவ்.

அடடா!! என்ன காரியம் செய்கிறாய்?"

என்று வேஷ்டியை வாங்க மறுத்தார் பெரியவர்.

பெரியவரே! பாண்டுரங்கனுக்கு பட்டு, பீதாம்பரம் போன்ற விலை உயர்ந்த வஸ்திரங்களை வழங்க பலர் உள்ளனர். கடந்த முறை இதே போல், சாதாரண நூல் வேஷ்டியும், அங்கவஸ்திரமும் வாங்கி வந்தேன். இதை அணிவிக்க மறுத்து விட்டார் அர்ச்சகர்.



கீதா–ராஜன்

"பாண்டுரங்கனுக்கு பட்டும் பீதாம்பரமும்தான் அழகு. நீ கொண்டு வந்த நூல் வேஷ்டியைக் கோயில் வாசலில் இருக்கும் பிச்சைக் காரனுக்குக் கொடுத்து விட்டுப் போ" என்று ஏளனமாகப் பேசினார். பிறகு வயதான ஒருவருக்குத் தானமாகக் கொடுத்தேன்.

இப்போதும் அதேபோல் நூல் வேஷ்டி தான் எடுத்து வந்துள்ளேன். இதைப் பார்த்ததும், அந்த அர்ச்சகர் வழக்கம் போல் வேஷ்டியைப் புறக்கணிப்பார். இதற்கு உங்களுக்குக் கொடுக் கலாமே? ஏழையின் சிரிப்பில்தானே ஆண்டவன் இருக்கிறான்' என்றார் ராமதேவ்.

அதன் பின், வேஷ்டியை வாங்கிக் கொள்ளச் சம்மதித் தார் பெரியவர்.

அத்துடன் ராமதேவா! வயதாகி விட்டதால் கைகள் நடுங்குகின்றன. நீயே எனக்கு அணிவித்து விடேன்!" என்றார்.

அதன்படி வேஷ்டியை அவரது இடுப்பில் கட்டிவிட்டவர், அங்கவஸ்திரத்தை அவரது தோளில் அணிவித்தார்.

ஆஹா! இப்போது நீங்கள், அந்தபண்டரிநாதனைப் போல வே இருக்கிறீர்கள்" என்றார்.

அந்தப் பெரியவர் மெள்ள புன்னகைத்தார்.

பின்னர் இருவரும் நெற்றி யில் திருநாமம் தரித்துக் கொண்டுகோயிலுக்குச்சென்ற னர்.

ராமதேவனுக்குப்பின்னே பெரியவர் வந்து கொண்டிருந் தார்.

அன்றைக்கு பாண்டுரங் கனை தரிசிக்க ஏகக் கூட்டம். ராமதேவ் திரும்பிப் பார்த்தார். பெரியவரைக் காணோம்.

பல இடங்களிலும் தேடினார். சரி.. பாண்டுரங்கனை தரிசித்து விட்டு, 'மீண்டும் பெரியவரைத் தேடுவோம்' என்று சந்நிதிக்கு வந்தார்.

அங்கே. ராமதேவன் வாங்கி வந்த நூல் வேஷ்டியையும் அங்கவஸ்தி ரத்தையும் அணிந்தபடி காட்சி தந்தார் பரம தயாளனான அந்த பாண்டுரங்கன்.

வியப்பில் மூர்ச்சித்து நின்றார் ராமதேவன்.

பகவானே! பெரியவராக என்னுடன் வந் தது நீதானா? பட்டு பீதாம்பரத்தை ஏற்கும் அர்ச்சகர்கள், குறைந்த விலையில் உள்ள வேஷ்டி யையும், அங்கவஸ்திரத்தையும் அணிவிக்க மாட்டார்கள் என்று நேராக என்னிடமே வந்து, என் கையாலேயே உனக்கு அணிவிக்கும் பாக்கியத்தையும் வழங்கி விட்டாய். என்னே உன் கருணை." என்று பாண்டுரங்கனை விழுந்து வணங்கினார் ராமதேவ்.

கீதா ராஜன், சென்னை.
போன்:9444228203



# மாமனின் சடாரி வழக்கத்தை கடைபிடிக்கும் மருமகன் முருகன்

குன்றுகள் தோறும் வீற்றிருந்து மனக் குறைகள் யாவும் கலையும் தமிழ் கடவுளான குமரன் அருளாட்சி செய்யும் ஓர் அற்புத மலைத் தலம்தான் ரெ குன்னத்தூர். இக்குன்றினை ஒட்டி ஊரும் அமைந்துள்ளது ஊரின் அருகே ரெண்டேரிப்பட்டு என்ற ஊர் உள்ளதால் இதனை சேர்த்து ரெண்டேரிப்பட்டு குன்னத்தூர் என்று அழைப்பார்கள். அதன் சுருக்கமே ரெ.குன்னத்தூர்

ஆகும். இக்குன்றின் மீது குறைவிலா வளங்கள் அருளிட பேரழகுடன் கோவில் கொண்டுள்ளார் ஸ்ரீ தண்டபாணி சுவாமி.

இக்குன்று முன்பு இராஜகம்பீரநல்லூர் என்று அழைக்கப்பட்டது. இங்கு முன்னொரு சமயம் மூன்று நதிகள் ஓடியதால் திருநதிக்குன்றம் என்று போற்றப்பட்டுள்ளது. சுமார் 150 வருடங்களுக்கு முன்பு இக்குன்றில் உள்ள சுனையில் வேல் மற்றும் செம்பு ஜடாரி கண்டெடுக்கப்பட்டு, ஸ்ரீ தண்டபாணி சுவாமி ஆலயம் எழுப்பப்பட்டது. அதற்கும் முன்பு இங்கு முற்றிலும் சிதைந்த பெருமாள் ஆலயம் இருந்ததன் காரணமாக முருகனின் மாமனான ஸ்ரீ ஏழுமலையான் பாதங்கள் கொண்ட ஜடாரியை இங்கு வரும் பக்தர்களுக்கு சாற்றுவது ஓர் அரிய வழக்கமாக போற்றப்படுகின்றது. அதோடு தீர்த்தமும் பிரசாதமாக வழங்கப்படுகின்றது.

எங்கும் பசுமை எழில் சூழ்ந்த இடத்தில் சுமார் 100 படிகளை கொண்டு அழகுற விளங்குகிறது

இக்குன்று குன்றின் கீழே விநாயகர் மற்றும் நவகிரக சன்னதிகள் அமைந்துள்ளன. பின்னர் படிகளைக் கடந்து மேலே சென்று பார்க்க பசுமை நம் கண்களை குளிர்விக்கும். இம்மலை அவ்வளவு அழகையும் நம் கண்களுக்கு விருந்தாக்கும். இன்னுமொரு அழகினை














நம் கண்கள் கண்டு மகிழ்ந்திட மயங்கிடப் போகிறது. அதுவே மூலவரின் எழில் கொஞ்சும் திருமேனியாகும். நாளெல்லாம் பார்க்கும் வண்ணம் அகிலத்தின் அழகையெல்லாம் தன்னுள்ளடக்கி அருள்பாலிக் கிறார் மூலவர் ஸ்ரீ தண்டபாணி சுவாமி. தென் முகமாக படிகளைக் ஏறிக்கடந்து மேலே செல்ல.அங்கே இடும்பனின் சுதை வடிவ தரிசனத்தை காண்கி றோம். அதோடு முருகனின் வாகனமாகத் திகழும் மயில்களையும் காண்கிறோம். பின் மீண்டும் வடக்குவாயில் வழியாக உள்ளே நுழைந்து, நேராக உற்சவர் திருமேனிகளை பார்க்கின்றோம். தனி விமானத்துடன் கூடிய கந்தனது சந்நிதி ஒரு திருச்சுற்றுடன் விளங்குகிறது. இங்கே மகா மண்டபத்தில் ஸ்ரீ தண்டபாணி சுவாமியின் பழைய மூல விக்கிரகத்தையும் தரிசனம் செய்கின்றோம். அதன் பின்பு மகா மண்டபம் கடந்து, அர்த்த மண்டபம் அடைந்து, மூலவரை தரிசிக்கின்றோம். சிரித்த முகம். நின்ற திருக்கோலம் கையில் தண்டம் ஏந்தி கிழக்கு முகம் பார்த்த வண்ணம் எழில் சிந்துகின்றார். ஆண்டியின் கோலத்தில் வீற்றருளும் இப்பெருமான், பழனியம்பதிப் பெருமானை நினைவு கூறுகின்றார்.

இங்கு முருகனுக்கு ஆரத்தி காண்பித்த பின் விபூதிப்பிர சாதமாகத் தரப் படுகிறது.



அதோடு திருமாலின்பாதங்கள் பதித்த ஜடாரியும் சாற்றப்படு கிறது. தீர்த்தமும் பிரசாதமாக வழங் கப்படுகிறது. உற்சவர் சன்னதியில் வள்ளி தேவசேனாவுடனான ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி, ஸ்ரீ விநாயகர் மற்றும் ஸ்ரீ தண்டபாணி சுவாமி ஆகிய விக்கிரக மூர்த்தங்களை கண்டு இன்புறுகின்றோம். . மேலும் எண்ணற்றவர்களின் குலதய்வமாக



மோ.கணேஷ்

விளங்குகின்றார் இத்தலத்தின் முருகன் ஸ்ரீ தண்டபாணி சுவாமி என்பது குறிப்பிடத்தக்கது. இவ் வாலயத்தில் 32 ஆண்டுகள் தவம் புரிந்து முக்தி பெற்ற அருள் யோகானந்த சுவாமி கள் சமாதி குன்றின் கீழே அமைந்துள்ளது இவர் தனது வாழ்நாளில் விபூதியின் ஆளே அனைத்து நோய்களையும் போக்கி அருள் புரிந்துள்ளார்.

இவரது சன்னிதியிலும் அவசியம் வழிபாடு செய்ய வேண்டும். இயற்கை எழில் சிந்தும் இவ்வாலய தரிசனம் நமக்கு ஆத்ம சுகமம், மனமகிழ்ச்சியும் தருவதில் ஐயமில்லை.

இவ்வாலய விசேஷங்களாக ஆடி கிருத்திகை, கந்தர்சஷ்டி, பங்குனி உத்திரத்தன்று நடைபெறும் வள்ளி தேவசேனா திருமண வைபவம், தமிழ் மற்றும் ஆங்கில புத்தாண்டு சிறப்பு அபிஷேக அலங்காரங்கள், வைகாசி விசாகம், மாசி மகம், பிரதி மாத பரணிசஷ்டி கிருத்திகைகள், கிருத்திகைகளின் போது கிரிவலம் வருதல் என பல்வேறு விழாக்கள் சிறப்புற நடத்தப்படுகின்றன.

2002–ஆம் ஆண்டு காஞ்சி மடாதிபதி ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தலைமையில் இவ்வாலய கும்பாபிஷேகம் வெகு விமரிசையாகவும், விஷேசமுடனும் நடைபெற்றுள்ளது.

குடமுழுக்கு தினத்தன்று ஆண்டு தோறும் இங்கு லட்சார்ச்சனை விழா வெகு சிறப்புடன் நடத்தப்படுகின்றது.

அங்காரகனது அதிதேவதையாக திகழும் ஸ்ரீ தண்டபாணி சுவா மிக்கு 7 செவ்வாய்க்கிழமைகள் வீட்டிலேயே விரதம் அனுஷ்டித்து, எட்டாவது செவ் வாயன்று இங்கு ஆலயத்திற்கு வந்து முருகனுக்கு அபிஷேகம் செய்தால் அங்காரக பிரீத்தி ஏற்படுவது திண்ணம். அங்காரக பரீத்தி, திருமண பாக்கியம் மற்றும் உயர்ந்த வாழ்வு ஆகியவற்றை வேண்டுவோர்

யாவரும் வழிபட வேண்டிய அற்புத தலமே ரெ.குன்னத்தூர் ஆகும்.

பக்தர்கள் யாவரும் ரெ.குன்னத்தூர் முருக னான ஸ்ரீ தண்டபாணி சுவாமியை வாழ்வில் ஒரு முறையாவது வழிபட்டு நல்வாழ்வைப் பெற்றிட வேண்டுகின்றோம்.

தினமும் காலை 8 மணி முதல் 10 மணி வரையும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் ஆலயம் திறந்திருக்கும்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் நகரிலிருந்து கிழக்கே இரண்டு கிலோமீட்டர் தொலைவில் ஆரணி செல்லும் சாலையில் அமைந்துள்ளது ஆர்.குன்னத்தூர்.

**பழங்காமூர் மோ.கணேஷ்.**
**தொடர்பு எண்: 9789156179**

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# முழங்கால் வலி தீர்க்கும் முருகன்




ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலிருந்து சுமார் 22 கி.மீ தொலைவில் உள்ளது மேலக்கொடுமலூர். முருகப்பெருமான்.

சூர சம்ஹாரத்துக்குப் புறப்பட்ட போது, அன்னை சக்தியிடமிருந்து வேல் மற்றும் பல ஆயுதங்களைப் பெற்றுச் சென்றார். அவற்றுள் பிரதானமான `மழு' எனும் ஆயுதத்தை முருகப் பெருமான் பெற்ற தலம் தான் கொடுமழூர் என்றழைக்கப்படும் மேலக்கொடுமலூர்.

அசுரர்களை அழித்துவிட்டுத் திரும்பிய முருகப் பெருமான், மாலை வேளையில் இத்தலத்தை அடைந்தார். அங்கே தவமியற்றிக்கொண்டிருந்த முனிவர்களுக்கு மேற்கு முகமாகக் காட்சி யளித்தவர், அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் இந்தத் தலத்திலேயே ஸ்ரீகுமரய்யா என் னும் திருப் பெயருடன் கோயில் கொண்டார்.

## முருகனுக்கு முக்கனி பூஜை

இங்கே முருகப்பெருமான் அஸ்தமன வேளையில் முனிவர்களுக்குக் காட்சி தந்ததால், சூரிய அஸ்தமனத்துக்குப் பிறகே அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. திங்கள், வெள்ளி, கிருத்திகை ஆகிய நாள்களில் இரவு வேளைகளில் 33 வகையான திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெறுவது குறிப் பிடத் தக்கது. வைகாசி மாதம் கடைசி வெள்ளிக் கிழமையன்று மா, பலா, வாழை ஆகிய முக் கனிகளால் செய்யப்படும் முப்பழ பூஜை மிகவும் பிரசித்திபெற்ற பூஜையாகும்.

இங்கே ஸ்ரீகுமரய்யாவுக்கு சுத்த அன்னம் நைவேத்தியம் செய்யப்படுவதில்லை. பழங்கள், தேன் கலந்ததினைமாவு, வெல்லம் கலந்த பாசிப்பருப்பு, கைக்குத்தல் அரிசிஆகியவையே நைவேத்தியமாகப் படைக்கப்படு கின்றன.

பாம்பன் சுவாமிகள், திருவேகம் பத்தூர் கவி ராஜ பண்டிதர், எம னேஸ்வரம் ஜவ்வாது புலவர் ஆகியோர் இத்தலத்தில் அருளும் முருகனைப் போற்றிப் பாடியுள்ளனர். இங்கு முருகப்பெருமான் பல்துலக்கி விட்டு வலப்புறமாக வீசிய குச்சியே உடைமரமாக வளர்ந்து, கோயிலின் தலவிருட்சமாக அமைந்திருப்பதாக நம்பிக்கை.



அழகுராஜா

## முருகன் அருளால் முழங்கால் வலி தீரும்!

தீராத முழங்கால் வலியால் அவதிப்படுபவர்கள், இந்தக் கோயிலுக்கு வந்து குமரய்யாவை வேண்டிக் கொண்டு, மஞ்சள் பூசப்பட்ட உடைமரக் கால்களை (கவட்டையுடன் கூடியது) வாங்கி சமர்ப்பித்தால், நாள்பட்ட முழங்கால் வலி நீங்கி விடும் என்பது பக்தர்களது நம்பிக்கை.

மேலும் வயிற்று வலி, நெஞ்சு வலி ஆகிய பாதிப்புகளால் அவதிப்படும் அன்பர்கள், இங்கு வந்து மாவிளக்கு ஏற்றி வைத்து முருகப் பெருமானை வணங்கி வழிபட்டுச் சென்றால், விரைவில் அந்தப் பிரச்னைகள் தீரும் என்கிறார்கள்.

அதேபோல், குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் 48 நாள்கள் விரதம் இருந்து, கோயிலின் தலவிருட்சமான உடைமரத்தின் இலைகளைப் பிரசாத மாகப் பெற்று உண்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பதால், ஏராளமானோர் இந்த பிரசாதத்தை வாங்கி பயனடைந்துள்ளனர்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

பெற 9444228203

இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# சாம்பிராணியின் அற்புதங்கள்

இமயமலைச்சாரல், சதுரகிரி பர்வத மலை, வெள்ளியங்கிரி மலை, கொல்லிமலை உள்ளிட்ட சில இடங்களில் ஒருவித மரத்தின் பிசினிலிருந்து கிடைப்பதே சாம்பிராணி ஆகும். இது மருத்துவ குணமும் வாசமிக்கதாகவும் இருக்கு.

## சாம்பிராணி புகை நன்மைகள்

முன்பு, குழந்தைகள் முதல் அனைவரும் வாரமொருமுறை எண்ணை தேய்த்து குளித்து வந்ததும், தலைமுடிக்கு சாம்பிராணி புகை போடுவது வழக்கம் குளித்து வந்ததும், தலையை துவட்டிக்கொண்டு சாம்பிராணி புகையை சுவாசித்தும், தலையிலும் காட்டிக்கொள்வர்.

பெண்களின் கருப்பை சார்ந்த பாதிப்பு களையும் சரி செய்வதுடன், சாம்பிராணி புகை யை சுவாசிக்க, அது உடலில் உள்ள உள் உறுப்பு களை எந்த வியாதியும் அணுகாமல், காக்கும்.

மேலும், தலைக்கு சாம்பிராணி புகையை காட்டி வர, தலை முடி கருமையாக வளர்ந்து, நரைகள் இல்லாமலும் முடிக்கொட்டுதல், பொடுகு மாதிரியான தலைமுடி பிரச்சனைகள் ஏற்படாது சாம்பிராணி மரப் பிசின்களில் உள்ள வேதிப்பொருட்கள், புற்று நோய் போன்ற வியாதிகளை சரியாக்கக்கூடிய, மருத்துவ தன்மை மிக்கதென ஆராய்ச்சியில் கண்டறிந்திருக்கின்றனர்.

சாம்பிராணி புகை நச்சுக்கிருமிகளை அழிக்கும் ஆற்றல் மிக்கது, எனவே, வீடு களில் நாம் பயன்படுத்தும் எல்லா இடங்களிலும் சாம்பிராணி புகையிட்டு வர, கிருமிகள் விலகும், குங்கிலியம் பொடியை கொண்டு தினந்தோறும் வீடு, தொழில் செய்யும் இடத்தில் புகை காட்டினால் கெட்ட சக்திகள் விலகி, நல்ல சக்திகள் உருவாகும் செல்வ செழிப்பு உண்டாகும் தொழில் செய்யும் இடத்தில் மக்கள் வரவு அதிகம் ஆகும். வியாபாரம் பெருகும்.

தூபக்கால் எனும் சாம்பிராணி காட்டும் பாத்திரத்தில், தேங்காய் ஓடுகளை எரித்து, அதில் நெருப்பை உண்டாக்கி, அதில் சுத்த சாம்பிராணியை பொடியாக்கி தூவ, வீடுகளில், தெய்வீக நறுமணம் உண்டாகும்.

இந்த சாம்பிராணி புகையை வீடுகளில் உள்ள பூஜையறையில் காட்டி விட்டு, பின்னர், வீடு முழுவதும், வரவேற்பறை, சமையலறை மற்றும் படுக்கையறை உள்ளிட்ட அனைத்து இடங் களிலும், சாம்பிராணி புகையை காட்டி வருவர்.

சாம்பிராணி புகையை சுவாசிக்க, அது உடலில் உள்ள இராஜ உறுப்புகள் அனைத்தையும் எந்த வியாதியும் அணுகாமல், காத்து வரும்.

## நச்சுக்களை அழிக்கும்:

சாம்பிராணி புகை நச்சுக் கிருமிகளை அழிக்கும் ஆற்றல் மிக்கது, எனவே, வீடுகளில் நாம் பயன்படுத்தும் எல்லா இடங்களிலும் சாம்பி ராணி புகையிட்டு வர, கிருமிகள் விலகி விடும், வீட்டில் உள்ளவர்களுக்கும் எந்த பாதிப்புகளும் நேராது என்ற எண்ணத்திலேயே, வீடுகளில் சாம்பிராணி புகை இட்டனர்.



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

1. தெய்வ கடாட்சம் உண்டாகும்..!
2. கண் திருஷ்டி, பொறாமை, சூனிய கோளாறுகளை நீக்கும்..!
3. தொழில்கள், செயல்கள் முன்னேற்றம்உண்டாகும்! சகல காரியங்களும் நிறைவேறும் வாய்ப்புகள் வரும் ..!
4. குழந்தை பாக்கியம் உண்டாகும். குழந்தைகளுக்கு நற்ஆயுள் அழகு ஆரோக்கியம் உண்டாகும்.
5. குடும்பத்துக்குள் பகைமை எதிர்ப்புகள் விலகும். துரோகிகள் விலகுவர்!
6. சிவகணங்கள் பாதுகாப்பு கிடைக்கும்!
7. பன்னிரண்டு வகையான பூத கணங்களும், துஷ்ட ஆவிகளும் நீங்கும்!
8. சகலவித நோய், சகல தோஷமும் நீங்கிட உதவும்!
9. திடீர்அதிர்ஷ்டம், மகாலட்சுமி கடாட்சம் உண்டாகும்!

## ஹோமம் செய்வதற்கு சமமாகுமா?*

சாம்பிராணி புகை போடுவது என்பது வீட்டில் ஹோமம் செய்வதற்கு இணையாக கருதப்படுகிறது சாம்பிராணி புகை ஆனது ஹோமத்தில் இருந்து வரும் புகைக்கு இணையான பலன்களைக் கொடுக்கும் அதனால் தான் நம் முன்னோர்கள் தொன்றுதொட்டு வீடுகளிலும் அவர்கள் தொழில் செய்யும் இடங்களிலும் சாம்பிராணி போட்டு அந்த இடத்தையே தெய்வ கடாட்சத்துடன் வைத்திருந்தார்கள்..

வாரத்தில் குறைந்தது இரண்டு முறையாவது சாம்பிராணி புகையை நன்கு புகைக்க விட்டு வீடு முழுவதும் மூளை முடுக்குகளிலெல்லாம் காண்பிக்க வேண்டும்.

## பல பலன்கள்

சாம்பிராணி புகையில் நீங்கள் காய்ந்த வேப்பிலைகளை போட்டு தூபம் இடும் பொழுது வீட்டில் இருக் கும்கொசு தொல்லை நீங்கும். மேலும் நோய் நொடிகளிலிருந்து நல்ல ஒரு நிவாரணமும் பெற முடியும்.

அதீத சக்திகளை கொண்டுள்ள சாம்பிராணி தூபம் அகில் போட்டு புகை மூட்டினால் அதிலிருந்துவரும் நறுமணத்தை குழந்தை பேறு இல்லாதவர்கள் சுவாசிக்கும் பொழுது அவர்களுக்கு குழந்தை பாக்கியம் விரைவில் உண்டாகும்.

சாம்பிராணி தூபம் போடும் பொழுது நீங்கள் வெண் கடுகு போட்டு வெடிக்க விட்டால் வீட்டில் இருக்கும் துஷ்ட சக்திகள் அனைத்தும் நீங்கி உங்களை சூழ்ந்து இருக்கும் பாகைகள் எதிரிகள் அனைவரின் சூழ்ச்சிகளும் முறியடிக்கப்பட்டு விடும்.

சாம்பிராணியுடன் வெட்டிவேர் அருகம்புல் ஆகியவற்றை காய வைத்து தூபம் போட்டால் தோஷங்கள் யாவும் விலகி சுபகாரியங்கள் மற்றும் காரிய சித்தி உண்டாகும் நினைத்த விஷயங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க கூடிய அற்புத சக்திகள் உருவாகும்.

குலதெய்வ அருளும் வீட்டில் தெய்வ அருளும் பெற சாம்பிராணி தூபம் வெள்ளிக் கிழமையில் தூதுவளை போட்டு காண்பியுங்கள் எப்பேர்ப்பட்ட குலதெய்வ குற்றங்களும் நீங்கி இதன் மூலம் நீங்கள் உங்களுடைய குல தெய்வத்தை உங்கள் வீட்டிற்கு அழைத்து வர முடியும்.

சாம்பிராணி தூபத்தில் ஜவ்வாது மற்றும் சந்தனம் ஆகிய பொருட்களை போட்டு புகை மூட்டினால் நல்ல அதிர்ஷ்டம் உண்டாகும். வீட்டில் லட்சுமி கடாட்சம் நிறையும் காய்ந்த துளசி இலைகளை போடும் பொழுது தடைகள் யாவும் விலகி வெற்றி கிடைக்கும்.

சாம்பிராணியுடன் நன்னாரி வேர் மருதாணி இலை நாய்க்கடுகு கரிசலாங்கண்ணி பொடி ஆகிய பொருட்களை போடும் பொழுது உங்களுக்கு துரோகம் இழைப்பவர்கள் கூட உங்களை நெருங்க முடியாமல் தடுக்கும் சகல ஐஸ்வர்யங்களும் பெரிய மனிதர்களின் ஆசீர்வாதங்களும் மகாலட்சுமியின் அருட் பார்வையும் உங்கள் மீது பரிபூரணமாகவிழும்.

அந்தக்காலம் முதல் இந்தக்காலம் வரை சாம்பிராணி புகையை வீடு மற்றும் தொழில் செய்யும் இடங்களில் மட்டுமல்லாமல் பிறந்த குழந்தைக்கும் காண்பிப்பது உண்டு பிறந்த குழந்தைக்கு மிதமான புகையை தலைப் பகுதிக்கு காண்பிக்கும் பொழுது தலையில் இருக்கும் நீர் மண்டைக்குள் கோர்க்காமல், நோய் நொடிகள் அண்டாமல் பாதுகாப்பாக இருக்கும்.


ஆர். சதீஷ்,

எனவே சாம்பிராணி புகையை ரசாயன கலவைகள் கொண்ட நவீன வகை கம்ப்யூட்டர் சாம்பிராணி பயன்படுத்துவதை விட இயற்கையாக கிடைக்கும் சாம்பிராணி பொடியை போட்டு நன்மைகளை பெறலாம்.

– ஆர். சதீஷ், கடலூர்
aboorvam divine centre
போன்: 9655714283



# இயற்கையை இறைவனாக போற்றி வாழ்ந்த வேதகால மக்கள்

யஜுர் வேதம் இந்த பெயர் பெறுவதற்கு வழி படுதல் என்ற பொருளைக் கொண்ட யஜ் என்ற வினைச் சொல் மூலக் காரணமாகும். நான்கு வேதங்களில் இது இரண்டாவது இடத்தில் வைக் கப்படுகிறது. இந்த வேதத்தில் அரசர்களும் குடிமக்களும் பின் பற்ற வேண்டிய சடங்கு முறை களை பற்றியும் அந்த சடங்குகளை செய்யும் போது சொல்ல வேண்டிய மந்திரங்களை பற்றியும் விரிவாக கூறுகிறது.

அதனால் இது மந்திரப்பகுதி, சடங்கு பகுதி என்று இரு பகுதிகளை கொண்டதாகவும் மந்திரங்களை கூறும் பகுதி சுக்கில யஜுர் என்றும் சடங்குகளை கொண்ட பகுதி கிருஷ்ண யஜுர் என்றும் பெயர் சூட்டி அழைக்கப்படுகிறது. யஜுர் வேதத்தில் உள்ள பாடல்களின் மொத்த எண்ணிக்கை 1946 ஆகும்.

இந்த பாடல்கள் பெறும் பகுதி சுக்கில யஜுர் வேதத்திற்குள் அடங்கி விடுகிறது. கிருஷ்ண யஜுர் வேதப்பகுதி உரைநடையாகவே இருக் கிறது. பொதுவாக மற்ற வேதங்களை போலவே இதிலும் சம்ஹிதை, பிரமாணம், ஆரண்யம் என்ற மூன்று பிரதானப் பகுதிகளும் கடைசியாக தத்துவ விளக்கங்களை கூறும் உபநிஷத பகுதியும் உண்டு. யஜுர் இரண்டு பாகமாக பிரிக்கப்பட்டிருப்பதால் ஆரண்யம் என்பது சுக்கில பகுதியில் மட்டுமே காணப்படுகிறது.

யஜுர் வேதம் 40 அத்யாயங்களை கொண் டது இதில் பெரிய அத்யாயங்களும் சிறிய அத் யாயங்களும் அடங்கியுள்ளது. ஒவ்வொரு அத்யாயமும் ஒரு தனிப்பட்ட விஷயத்தை பற்றி மட்டுமே பேசவில்லை. பலதரப்பட்ட விஷயங் களின் கலவையாகவே ஒவ்வொரு அத்யாயமும் அமைந்துள்ளது.

**கடவுள் உருவாக்கிய மதம்**

இதில் உள்ள மந்திரங்கள் சடங்குகளின் போது ஒருவராலோ, பலராலோ ஓதப்படும் வண் ணம் அமைந்துள்ளது. சடங்குகள் எதற்காக செய்யப்பட்டாலும் நெருப்பு இல்லாமல் எந்த சடங்குகளும் வேதகாலத்தில் நிகழ்த்தப்பட முடியாது. சடங்குகளின் நெருப்பு அவசியம் என்பதனால் அந்த நெருப்பை மூட்ட சமித்துக்கள் என்ற மரக்குச்சிகள் தேவை.

எல்லா மரங்களிலுள்ள உலர்ந்த குச்சிகளை சமித்துக்கள் என்று அழைத்துவிட முடியாது. சில குறிப்பிட்ட வகை மரக்குச்சிகளை தான் குறிப்பாக அரசு, மா, தேவதாரு, சந்தனம் போன்ற மரக்குச்சிகளை தான் வேதகால ரிஷிகள் சமித்துக்கள் என்ற தகுதியில் அழைத்தார்கள். அவர்கள் அன்று சமித்துக்கள் என்று தனித்தகுதி சிறபித்த மரக்குச்சிகளே இன்றளவும் யாகங்களில் பயன்படுத்தப்பட்டுவருகிறது.

சடங்குகள் என்பது ஒரு தனி மனிதனின் சுய தேவைக்காகவும் ஒரு சமுதாயத்தின் பொது நோக்கத்திற்காகவும் நடத்தப்பட்டது. தனி மனிதனுக்குரிய சடங்குகளை செய்ய எழுப்பப்படும் அக்னி குண்டங்கள் அல்லது யாகசாலைகள் ஆகவனியம், தட்சனாக்னியம், காரக பத்தியம் என்று மூன்று வகையாக அழைக்கப்பட்டது.

எந்த திசையை நோக்கி யாக குண்டம் அமைக்கப்படுகிறதோ அதை பொறுத்து. அதாவது மேற்கு திசை நோக்கி யாக சாலை அமைக்கப்பட்டால் காரகபத்தியம் என்றும் கிழக்கு நோக்கி அமைந்தால் ஆகவனி என்றும் தெற்கை நோக்கி அமைந்தால் தட்சனாக்னியம் என்றும் வழங்கப்பட்டது.

இனி யஜுர் வேதத்தின் சில பகுதிகளை

பார்ப்போம் இந்த வேதத்தின் முதல் பாடல் சூரிய தேவனை வணங்கி ஆரம்பிக்கிறது. ஒளி மயமான கதிர்களுடன்கிழக்கு வானிலிருந்து புறப்பட்டு வரும் சூரிய தேவனே உன்னை மங்களமாரன வார்க்கைகள் சொல்லி வரவேற்கிறேன்.

நீ எங்கள் பசுகூட்டத்தை பாதுகாக்கிறாய் அவைகளின் மீது மிருகங்களும் துஷ்டமனிதர்களும் பாயாதபடி வெப்பம் நிறைந்த உனது கண்களால் பார்த்துக் கொண் டிருக்கிறாய்.

எங்களது செல்வங்களான பசுக் களின் எண்ணிக்கை வளரும் வண்ணம் அவற்றிற்கு தாராளமாக உணவை கொடுக்கிறாய் இந்த பசு செல்வங்களை எங்களிடமிருந்து அபகரிக்க நினைக்கும் தீய மனம் கொண்ட பகைவர்களை உன் ஒளிக்கரங்களால் விரட்டு கிறாய். அதற்கு நன்றி செலுத்த இந்த யாகத்தில் உனக்குய பங்கினை அக்னியிடம் கொடுக்கி றேன். உன் பங்கு மேன் மேலும் பெருகட்டும் என்று சூரியனை வேதகால ரிஷி போற்றி வணங்குகிறான்.

இந்த பாடல் மூலம் அடிப்படையான இரண்டு விஷயங்கள் நமக்கு தெரியவருகிறது. நாம் நினைப்பது போல் அந்த கால மக்கள் அறிவியல் சிந்தனை அற்ற அசடர்களாக இருக்கவில்லை. புல் பூண்டுகள் சூரிய வெளிச்சத்தினால் தான் நன்கு வளரும் வெளிச்சம் இல்லை என்றால் தாவரங்களின் வளர்ச்சி சரிவர அமையாது என்பதை போன்ற அடிப்படையான அறிவியல் அறிவையும் அவர்கள் பெற்றிருந்தார்கள்.

அடுத்ததாக அவர்கள் மாடு மற்றும் கால் நடைகளை நம்பி வாழ்ந்தவர்களாக இருந்த மையனால் ஒரே இடத்தில் நிரந்தரமாக தங்கும் இயல்பு இல்லாதவர்களாகவும் பல இடங்களுக்கு சுற்றி திரியும் தன்மையோடு இருந்தமையாலும் பட்டறிவு என்பது அளவுக்கு அதிகமாக கொண்ட வர்களாக இருந்திருக்கிறார்கள்.

மேலும் யஜூர்வேதத்தில் உள்ள மூன்றாவது பாடல் ஆழமான தத்துவக் கருத்தை வெளி யிடுகிறது. என்னை அதனுடன் இணைத்தது யார் அவன்தான். என்னை அதனுடன் பிணைத் தவன் யார் அதுவும் அவன் தான். இந்த வேலையை தொடங்கியவன் நீயே அதை முழுமை யாக்கியவனும் நீயே என்ற கருத்து பட நீண்டு செல்லும் இந்த பாடலில் வரும் அது என்ற



யோகி ஸ்ரீ
ராமானந்த குரு

வார்த்தை வேத கால தெய்வங்கள் எதையும் பொதுவாகவோ சிறப்பாகவோ சுட்டிக் காட்டாமல் மறை முகமாக பரமாத்ம தத்துவத்தை சுட்டி நிற்பதை உணரலாம். இதே போக்கில் வேறு இரு பாடல்களும் முடிவாக விஷ்ணுவை பற்றிய ஒரு பாடலும் வருகிறது. இப்பாடல்கள் அனைத்தையும் இணைத்து பார்க் கின்ற பொழுது நாராயணனை பரம் பொருளாக கருதும் கருத்து யஜூர் வேதத்திலும் இருந்திருப்பது தெரிகிறது.

சிந்து நதி கரையிலும் அதன் உபநதிகளான ஆறு நதிகளையும் இணைத்துக் குறிப்பிடும் சப்த நதி மண்டலத்தில் இந்த மக்கள் தங்களது வாழ்க்கை ஓட்டத்தை நடத்திக் கொணடிருந்த போது பல தேவதைகளை வழிபடுபவர்களாக இருந்திருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் ஒரே கடவுள் தான் உண்டு என்ற வாதங்கள் உருவாகா மல் இருந்திருக்கிறது.

சிந்துவை தாண்டி யமுனையையும், கங்கை யையும் கடந்து அந்நதிகரையோரம் பரந்து விரிந்த சமவெளியில் நிலையான வாழ்வைத் துவங்க குடியேறிய பின்னரே வேத மைந்தர்களுக்கு ஒரே






கடவுள் தான் இருக்க வேண்டு மென்ற சிந்தனை தெளிவு ஏற்பட்டிருக்கிறது. அதனால் தான் ரிக் வேதம் தோன்றி பல காலத்திற்கு பின்னால் தோன்றிய யஜூர் வேதத்திலும் அதர்வண வேதத்திலும் ஒரே கடவுள் என்ற சிந்தனை அதிக அளவில் நம்மால் காண முடிகிறது.

வேத கால வாழ்வில் சிந்தனைகளை விட சடங்குகளுக்கு அதிக முக்கியத்துவம் இருந்தது. யாககுணடங்களை ஏற்படுத்தி அக்னியை வளர்த்தான் அதிலிருந்து கிளம்பும் புகை மழையை வரவழைக்கும் சக்தியை பெற்றிருப்பதாக நம்பினர். அதனால் தான் நெருப்பை உருவாக்கும் சமித்துகளையும் அதனை வளர்க்கும் நெய்யையும் புனித மிக்கதாக கருதி சமித்துக்கள் அக்னி தேவனின் உணவு என்றும் நெய் அவனுக்கு ஆற்றலைக் கொடுக்கும் பொருள் என்றும் புகழ்ந்து பாடினார்கள்.

இயற்கையோடு ஒருங்கிணைந்து வாழ்ந்த தினால் இயற்கையின் வளர்ச்சியில் தான் தங்களது சமூக வளர்ச்சியும் அடங்கியிருப்பதாக கருதி இயற்கை வளங்களை செழுமைபடுத்துவதற்கான சடங்குகளை ஏற்படுத்தி எந்த சடங்கை எப்போது செய்ய வேண்டும் என்ற நியதியையும் வகுத்தார்கள்.

அந்த ஒழுங்கு முறைக்கு எதிராக பிற்கால சமூகம் செல்லக் கூடாது என்றும் எச்சரித்தனர். வேத நெறிகளை அலச்சியம் செய்யாதே அந்த நெறிப்படி தினசரி நெருப்பை வளர்த்து தேவதைகளை திருப்திபடுத்து யாகப்புகை மேலே செல்லாவிட்டால் மேகங்கள் கூடாது மழை பொழியாது மழை இல்லை என்றால் வாழவே முடியாது என்று அவர்கள் எச்சரித்தது அன்றைய வாழ்க்கைக்கு மட்டுமல்ல இன்றைய வாழ்க்கைக்கும் பொறுத்தமாகவே இருக்கும்.

யாகங்களிலுள்ள விஞ்ஞான பூர்வமான உண்மைகளை விவரிப்பது இந்த இடத்தில் நமது நோக்கம் இல்லையென்றாலும் யாகங்களின் சிறப்பை ஓரளவாவது நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். முறைப்படி சப்தம் தவறாத வேத கோஷங்களுடன் செய்யப்படும் யாகங்கள் மழையை வருவிப்பதும் நச்சு புகையிலிருந்து உயிர்களை பாதுகாப்பதும் நாம் அறிந்ததே ஆகும்.

தீயை வளர்த்து நெய்யை வார்த்து செய்யப்படும் யாகங்கள் அறியாமையின் வெளிப்பாடு அல்ல. கண்ணுக்கு தெரியாமல் பூமியெங்கும் பரவி கிடக்கும் அணுக்களை வேதியியல் முறையில் அசைவித்து நமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் அறிவுப் பூர்வமான செயல்பாடே யாகங்கள் ஆகும்.

அந்த யாகங்கள் சரிவர செய்யப்படாததினால் செய்யும்பண்டிதர்களும் யாகங்களை முறைதவறி செய்வதினாலையும் தான் பருவ காலங்கள் தனது கடமைகளை சரிவர செய்ய முடியாமல் இயற்கை அழிவுகளுக்கு விதை தூவுகிறது. இதை உணர்ந்து தேசத்தில் எதாவது ஒரு மூலையில் நியமப்படி வேதகால யாகம் தொடர்ச்சியாக நடத்தப்படும் என்றால் பூமி பந்தின் கோபச்சூடு கொஞ்ச நேரம் குறையும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

ஆன்மிகமலர்
ஆன்மிக விஷயங்களின் முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம். நமது சேனலில் சென்று முழுவதுமாக பார்த்து பயன் பெறுங்கள்...
ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share

# நினைவுத் திறனை மேம்படுத்துவதற்கான வழிகள்

அன்புமிக்க குருதேவர் அருளுகிறார்: “ மனிதனுடைய மனத்திறமைகள் கடந்த கர்மவினைக்கேற்ப மரபுரிமையாகப் பெறப்படுகிறது என்பது உண்மை. ஆனால் நினைவாற்றலை வளர்க்க முடியும் . பலவகையான பயிற்சிகள் இந்தத் திறனை மேம்படுத்த உதவி செய்யும்.”

அவர் தொடர்கிறார்: “ திட்ட உணவுப்பழக்கம் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. கூரிய நினைவாற்றலுக்கு தூய பாலும் தயிரும் உகந்ததாக இருக்கின்றன. அளவுக்கு அதிகமாக உண்பது அதை மோசமாகப் பாதிக்கும். உணவிலுள்ள அதிகமான கொழுப்புச்சத்து ஜீரணத்தைக் குறைத்து இறுதியில் நினைவாற்றலைப் பாதிக்கிறது. வறுத்த, மற்றும் கொழுப்புள்ள உணவுவகைளை எப்பொழுதாவது ஒருமுறை மிதமான அளவில் மட்டும் சாப்பிடலாம். பன்றி இறைச்சி அல்லது பன்றி இறைச்சியினால் செய்யப்பட்ட பொருட்களை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். அவற்றை அதிகமாக உண்பதினால் நினைவாற்றல் அழிக்கப்படக்கூடும். ஒரு வேளை நீங்கள் நினைக்கலாம், “நான் பன்றி இறைச்சிப் பொருட்களைச் சாப்பிடுகிறேன். இருந்தும் எனக்கு நல்ல நினைவாற்றல் உள்ளது”. என்னுடைய பதில், அந்த நல்ல நினைவாற்றலை நீங்கள் கடந்த பிறவியிலிருந்து கொண்டுவந்திருக்கிறீர்கள். பன்றி இறைச்சியை தொடர்ந்து உண்பதானது அதை இழக்கச்செய்துவிடும்.”

“குளிர்ந்த நீர் குளியல் நினைவாற்றலுக்கும் நரம்புகளுக்கும் பயன்தரக்கூடியவை. நரம்புகளைக் குளிர்வித்தல் மன அமைதியை மேம்படுத்துவதற்கு உதவி செய்யும். ஓர் அமைதியான மனம் அனுபவங்களைத் தெளிவாகத் திரும்பக் கொண்டுவரும் ஒரு கருவியாகிறது.”

“பாலுணர்வில் மிதமிஞ்சி ஈடுபடுவது, நினைவாற்றலுக்குச் சீரழிவைக் கொடுக்கும். அது வேறு எந்தக் காரணியையும் விட அதிகமாக அதனுடைய சக்தியை இழக்கச் செய்து விடுகிறது. சுயகட்டுப்பாட்டைப் பெற்றிருப்பவர்கள், பேராற்றல் வாய்ந்த நினைவாற்றலை, பேராற்றல்வாய்ந்த மனோசக்தியை விருத்திசெய்ய முடியும். இதற்கான ஓர் உதாரணம் பிரம்மச்சாரியாக வாழ்ந்த சர் ஐஸக் நியூட்டனின் அசாதாரணமான நினைவாற்றலாகும். நீங்கள் கற்றறிந்த


www.aanmeegamalar.com

அல்லது தெரிந்து வைத்துள்ள விஷயங்களை நினைவுகூர்வதற்கு சுய உணர்வோடு முயற்சி செய்தாலும்கூட நினைவாற்றலை விருத்தி செய்ய முடியும். கடந்தகால அனுபவங்களின் விவரங்களை நினைவில் கொண்டுவர முயற்சி செய்யுங்கள். மனதளவில் எண்களைக் கூட்டி கழித்தாலும் உதவிகரமாக இருக்கும். துரதிருஷ்டவசமாக அநேகர் அவர்களுடைய நினைவாற்றலை இந்த வழிகளில் ஒருபொழுதும் பயிற்சி செய்வதில்லை.



குருப்ரியா

கைமுட்டிகளால் தலை உச்சியில் மென்மையாகத் தட்டுவது நினைவாற்றல் சக்தியை விருத்தி செய்வதற்கான மற்றொரு முறையாகும்.”

“அனைத்தையும் ஆழ்ந்த கவனத்துடனும் ஒருமுகப்படுதலுடனும் செய்வதற்குக் கற்றுக்கொள்ளுங்கள். ஆனால் முக்கியமல்லாத, விவரங்களுக்காக எளிதில் திருப்தியுறாத, தொடர்ந்து நச்சரிக்கின்ற, அலட்டிக்கொள்கின்ற அளவுக்குக் கவனத்தைச் செலுத்துபவர்களைப்போல் இருக்காதீர்கள். பெரும்பாலான மக்கள் அவர்களுடைய கடமைகளை கவனக்குறைவோடு செய்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப்பற்றி அவர்களுக்கு எப்பொழுதும் தெரிவதில்லை!”

மேலும் குருதேவர் கூறுகிறார்: “கவிதை அல்லது உரைநடை எழுதுவது நினைவாற்றலை விருத்தி செய்கிறது. பொதுவாக, என்ன எழுதினீர்களோ, அவற்றை நீங்கள் விரைவாக நினைவிற்குக்கொண்டுவர முடியும். ஏனென்றால் அதில் நீங்கள் அதிகமாக உணர்வையும் கவனத்தையும் செலுத்தியிருக்கிறீர்கள். சில அனுபவங்களுடன் சேர்ந்துவருகின்ற உணர்வுத் தூண்டுதல், அவற்றை நீங்கள் நினைவுகூர உதவி செய்யும். ஆழ்ந்த மனக்கிளர்ச்சியோடு நீங்கள் செய்துள்ள அல்லது அனுபவித்துள்ள எதையும் நீங்கள் எளிதாக நினைவு கூர்கிறீர்கள். குறைவான நினைவாற்றலுடைய ஒரு மனிதன்கூட அவனுடைய துயரங்களை நினைவு கூர்கிறான்.”

“எல்லாவற்றிலும் இறுதியாக கடந்த காலத்தின் நல்ல விஷயங்களை மட்டும் நினைவு கூரத் தீர்மானியுங்கள். ஒருபொழுதும் உங்களுடைய உணர்வு நிலையின் ஆலயத்திற்குள் தீய எண்ணங்களைக் கொண்டுவர உங்கள் நினைவாற்றலை தவறான முறையில் பயன்படுத்தாதீர்கள். இறைவனின் ஞாபகத்தில் அந்த ஆலயத்தைப் புனிதமாக வைத்திருங்கள். இந்த அக சரணாலயத்திற்குள் தீய நினைவுகளென்ற கொள்ளையர்களை நுழைய விடாதீர்கள். தேவைகளுக்கு மட்டும் அதைத் திறந்து விடுங்கள். உங்களுக்குள்ளே உள்ள தெய்வீக ஆன்ம ஆலயத்தில் சந்தோஷம் இருக்கிறது. அங்கே நன்மைகள் இருக்கின்றன. அத்துடன் விசுவாசம் நம்பிக்கை, தைரியம், அமைதி மற்றும் மகிழ்ச்சியும் உள்ளன. நன்மைகளை மட்டும் நினைவுகூர்வதனால், இந்த எல்லா குணங்களையும் உங்களுக்குள்ளே உள்ள ஆலயத்தில் சேமித்து வைக்க முடியும்” என்று குருதேவர் உறுதியாகக் கூறுகிறார்.

இந்த கட்டுரையில் குறிப்பிட்டுள்ள குருதேவரின் போதனைகளுக்குரிய ஓர் உதாரணத்தை பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் அருளியுள்ளார். இறைவனை அடைவதற்காக நமது சரீரத்தை நிலைநிறுத்தவேண்டியுள்ளது. அதற்காக என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அருளியுள்ளார். அதற்கு தார்மீகமான வாழ்க்கை வாழ வேண்டியது மிகவும் அவசியம். அதைத் தொடர்ந்து, உணவு பழக்கத்தையும் சரியான முறையில்

108
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக



வைத்துக்கொள்வது மிகவும் அவசியம்.

பகவான் கிருஷ்ணன் அருளுகிறார்:

ஆயு : ஸத்வபலாரோக்ய ஸுகப்ரீதிவிவர்த்தனா:

ரஸ்யா : ஸ்னிக்தா : ஸ்திரா ஹ்ருத்யா

ஆஹாரா : ஸாத்விகப்ரியா:

“ஆயுள், வீர்யம், சக்தி, ஆரோக்கியம், சுகம், ப்ரீதி ஆகியவற்றை அதிகரிப்பவையும் ஆறுசுவை குணங்களை சரியாக நிலை நிறுத்துகின்றவையும் இதயத்திற்கு திருப்தியை அளிப்பவையும் ஆகின்ற உணவு பொருட்களை சாத்வீகமான ஒருவன் விரும்புகிறான். அதாவது சத்துவகுணம் அதிகரிக்கும்போது அப்படிப்பட்ட உணவு பொருட்களில் மட்டும்தான் திருப்தி ஏற்படுகிறது. சரீரத்திற்கும் மனதிற்கும் இன்பத்தையும் திருப்தியையும் ஏற்படுத்துகின்றவைதான் மேலே கூறப்பட்டவைகள்.

ஆனால் ரஜோ குணமும் தமோகுணமும் அதிகரித்திருக்கின்றவருக்கு மேலே கூறியவை திருப்தியை அளிப்பதில்லை.” (பகவத் கீதை அத்17 ஸ்லோகம் 8)

உணவு பொருட்கள் மட்டுமின்றி வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டியதனைத்தும் நம் ஆன்மாவைக் காப்பாற்றும் பொருட்டானவையாக இருக்க வேண்டும். நாம் அதற்காகத்தான் இப்பூமிக்கு வந்துள்ளோம். இந்த உடலெனும் கூட்டிற்குள் அகப்பட்டுக் கிடக்கின்ற ஆன்மாவைக் காப்பாற்றும் பொறுப்பு நம்முடையதுதான்.

சரீரமும் மனதும் நன்றாகயிருந்தால் மட்டும்தான் குருதேவர் கூறியுள்ள வழிகளில் நாம் நம் வாழ்க்கையை நடத்தி அதனால் செய்யும் கர்மங்கள் அனைத்தும் இறைநினைவுடன் இருக்கும். அவ்வாறு செய்யும்பொழுது நினைவுத்திறனை மேம்படுத்தலாம்: எந்தப் பணியைச் செய்தாலும் சரியாகச் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை உண்டாகும். அதுவே இறைவனிடத்தில் அழைத்துச் செல்ல எதுவாகும்.

மனமாகின்ற நிலத்தை தியானத்தால் உழுது பக்குவப்படுத்தி, அன்பு என்னும் நீரைப்பாய்ச்சி நல்ல எண்ணங்கள் என்னும் வளம் போட்டு, இறை நினைவு என்ற விதை விதைத்து, அது முளையிடும்பொழுது நல்ல குணங்களாகின்ற வேலிபோட்டு பாதுகாத்தால் இறை நினைவு என்ற செடி முளைத்து பெரிய மரமாகி பூத்து, காய்த்து, இறை அனுபூதி என்னும் பழத்தை நாம் ஆனந்தமாக உண்ணலாம். அதற்கு குருதேவர் கூறுவது போன்று நாம் செயல்படவேண்டும்..

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**



**தொடர்பு கொள்ள வேண்டிய எண்:**

**9444228203**

aanmeegamalar

www.aanmeegamalar.com

# கொடுமைக்காரர்களை அழிக்கும் பெரியாச்சி

ஒரு காலத்தில் பாண்டிய நாட்டை சேர்ந்த வல்லராஜா எனும் பெயர் கொண்ட ஒரு மன்னன் இருந்தான். அவன் ஆட்சியில் பலரையும் கொடுமைப்படுத்தி வந்தான். மக்களுக்கு மட்டும் அல்ல, ரிஷி முனிவர்களுக்கும் அவனால் பெரும் தொல்லைகள் தோன்றின. அவன் ராக்ஷசர்களையும், அசுரர்களையும் தன் கையில் வைத்து இருந்தான். அதனால் அவனை யாராலும் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அதே நேரத்தில் அவனுக்குத் துணையாக இருந்த அரக்கர்களும், அசுரர்களும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள பெரியாச்சி அம்மனை துதித்து வந்தார்கள்.



www.aanmeegamalar.com

அப்படி வாழ்ந்து கொண்டு கொடுங்கோல் ஆட்சியை நடத்தி வந்தவன் ஒருமுறை ஒரு முனிவர் மூலம் ஒரு சாபத்தைப் பெற்றான். அவளுக்குப் பிறக்க இருந்தக் குழந்தை பிரசவம் ஆனதும் அந்தக் குழந்தையின் உடல் உடனே பூமியைத் தொட்டு விட்டால் அவன் அழிந்து விடுவான். அவனது நாடும் அழிந்துவிடும்.

மேலும் அவனது குழந்தையே அவனுக்கு மரணத்தை ஏற்படுத்தித் தரும். மாறாக அது பூமியைத் தொடாமல் ஒரு நாள் இருந்து விட்டால் அதற்குப் பிறகு ஒன்றும் ஆகாது.

அந்த மன்னனுக்கு வெகுகாலம் குழந்தை பாக்கியமே இல்லாமல் இருந்தது. ஒருமுறை மனைவி கர்பவதி ஆனாள்.

பிறக்கும் குழந்தை பூமியை உடனே தொட்டுவிட்டால் தனக்கு மரணத்தை சம்பவிக்கும் என்றாலும், அந்த சாபம் தோல்வி அடைந்து விட்டால் அதற்குப் பிறகு தனக்கு ஆபத்து கிடையாது என்பதை தெரிந்து




வைத்து இருந்தவன் என்ன செய்வது என தவித்தான்.

ஆனால் அவன் அழிய வேண்டும் என்ற விதி இருந்ததினால் அசுரர்களையும் அரக்கர்களையும் அடக்கி வைத்து இருந்த பெரியாச்சி அம்மன் அவன் நாட்டில் ஒரு வயதோகிய பெண்மணி உருவில் வலம் வந்து கொண்டு இருந்தாள்.

அந்த காலங்களில் கட்டில்கள் கிடையாது. சொகுசான மெத்தைப் போன்றவையும் கிடையாது. பிரசவம் என்றாலே பிரசவத் தீட்டுப் படாமல் இருக்க பிரசவ வேளை வந்ததும் வீடுகளின் மூலைகளில் அவர்களை தனியாக இருக்கச் சொல்வார்கள். தரையில் பாயின் மீதுதான் இருந்து பிரசவிப்பார்கள். அத்தனைக் கட்டுப்பாடு இருந்த காலம் அது. அதனால்தான் பிரசவம் பார்க்க என்றே அனுபவம் மிகுந்த வயதான ஆச்சிகளை கர்பிணிகளுக்குத் துணையாக இருக்க வைப்பார்கள்.

அரசன் தன்னுடைய படையினரை அனைத்து இடத்துக்கும் அனுப்பி மனைவிக்கு பிரசவம் பார்க்க தக்க துணையைத் தேடினான். ஆனால் யாரும் அவனுக்கு உதவ முன் வரவில்லை. ராணிக்கு பிரசவ


புனிதவேல்

வலி வந்துவிட்டது. பிறக்கும் குழந்தையும் நலமாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் தானும் அழியாமல் இருக்க வேண்டும் எனக் கவலை அடைந்த மன்னன் உடனடியாகக் கிளம்பி தானே ஊருக்குள் சென்று நல்ல ஆச்சியை பிரசவத்திற்காக தேடிக் கொண்டு இருந்தபோது மன்னனின் முன்னால் ஒரு வயதான பெண்மணியின் உருவில் இருந்த பெரியாச்சி அம்மன் தென்பட்டாள்.

பெரியாச்சி அம்மன் ஒரு தெய்வப் பிறவி என்பதை அறியாமல் அவளது உதவியை மன்னன் நாடினான். பெரியாச்சி அம்மனும் அவனது மனைவிக்கு பிரசவம் பார்த்து அவன் குழந்தையின் உடல் முதலில் பூமியில் படாமல் பார்த்துக் கொள்வதாக கூறி விட்டு அவனிடம் ஒரு நிபந்தனைப் போட்டாள்.

அந்த நிபந்தனையின்படி அவள் அவனுக்குப் பிறக்கும் குழந்தையின் உடல் பூமியில் படாமல் வைத்துக் கொண்டு இருந்து விட்டால் அவளுக்கு ஏராளமான பொருட்களைத் தருவதாக உறுதி அளித்தான்.

குழந்தைப் பிறந்தது. மன்னனின் மனைவியின் அருகிலேயே அமர்ந்து கொண்டு இருந்த பெரியாச்சி அம்மனும் குழந்தையை தன்னுடைய கையில் ஏந்திக் கொண்டு அமர்ந்து இருந்தாள். காலக்கெடு முடிந்ததும், அரசன் வந்து அந்தக் குழந்தையை தன் மனைவியிடம் தருமாறு கேட்டான். ஆனால் பெரியாச்சி அம்மனோ குழந்தையை தன் கையிலேயே வைத்துக் கொண்டு முதலில் தனக்குத் தர வேண்டிய பொருட்களைக் கொண்டு வருமாறு கூறினாள்.

ஆணவம் பிடித்த மன்னனோ, ஒரு வயதான பெண்மணியினால் தன்னை என்ன செய்ய முடியும் என இறுமாப்புக் கொண்டு அவளுக்குக் கூறியபடி ஒன்றும் தர முடியாது எனவும், குழந்தையைக் கொடுக்காவிடில் உன்னைக் கொன்று விடுவேன் என கோபமாகக் கூறிய வண்ணம் உருவிய வாளுடன் பெரியாச்சியின் அருகில் சென்றான்.

அவ்வளவுதான், ஆத்திரம் அடைந்த பெரியாச்சி நான்கு கைகளுடன், கோரமான உருவைக் கொண்டு பயங்கரமான கண்களுடன் தன் சுய உருவைக் காட்டியபடி அங்கு அமர்ந்தாள். ஒரு கையில் குழந்தையை உயர்த்திப் பிடித்தாள். இன்னொரு கையினால் மன்னனின் மனைவியை தூக்கித் தன் தொடை








மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்


மீது வைத்துக் கொண்டு அவள் வயிற்றைக் கிழித்து அவள் உடலின் உட் பாகங்களைக் கடித்துத் தின்றாள். அதற்கிடையில் தன் அருகில் உருவிய வாளுடன் வந்த மன்னனை தன் காலடியில் தள்ளி அழுத்திக் கொன்றாள். அவன் படையினரை அவளது அடிமைகளான அசுரர்கள் துரத்திக் கொன்றார்கள்.

இப்படியாக கொடுங்கோல் மன்னனின் கதையை அவன் வம்சத்தோடு முடித்ததும் ஆக்ரோஷமாக நின்ற அவளைக் கைகூப்பி வணங்கி நின்ற மக்கள் அவள் கோபத்தைத் தணித்துக் கொண்டு தம்மை காப்பற்றி அருளுமாறு வேண்டிக் கொள்ள அவளும் கோபம் தணிந்து தன்னைப் பற்றிய உண்மையைக் கூறினாள்.

தானே காளியின் அவதாரம் எனவும், இனி தன்னைத் துதித்து வணங்கி வந்தால் தான் குடிகொள்ளும் ஊரைக் காப்பேன் எனவும், அவரவர் வீடுகளில் உள்ள கர்பிணிகளுக்கு சுகப் பிரசவம் ஆகவும், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் நன்கு வளரவும் தான் உதவுவேன் என்றும், அவர்களுடைய குழந்தைகளுக்கு தானே பாதுகாவலராக இருப்பேன் எனவும் உறுதி தந்தாள்.

இப்படியாக தன்னை அடையாளாம் காட்டிக் கொண்டவள் பல கிராமங்களில் கிராம தேவதையாகவும், நகரங்களில் நகர மக்கள் வணங்கும் பேச்சி அல்லது பெரியாச்சி அம்மனாகவும் விளங்கி வருகிறாள். அவள் ஆடி மாதத்தில் பெருமளவு ஆராதிக்கப்படுகிறாள்.

கர்பிணிகளை அவள் ஆலயத்தில் அழைத்துச் சென்று அவள் ஆசிகளை வேண்டுகிறார்கள். குழந்தைப் பிறந்ததும், தொட்டில் போட்டு பெயர் வைக்கும் முன் முதலில் அவள் சன்னதிக்கு எடுத்துச் சென்று குழந்தையை அவள் சன்னதியில் கிடத்தியப் பிறகு வீட்டிற்கு எடுத்து வந்து மற்ற சடங்குகளை செய்கிறார்கள்.

பெண் குழந்தைகளுக்கு காது குத்தல் மற்றும் மொட்டைப் போடுதல் போன்ற சடங்கு களையும் அவளை வேண்டிக்கொண்டு அவள் ஆலயத்தில் செய்கிறார்கள். அவளை சிலர் மாரியம்மனின் அவதாரமாகவும் பார்க்கின்றார்கள்.

கிராமப்புறங்களில் உள்ள அவளது சில ஆலயங்களில் அவளுக்கு மிருக பலிகள் தரப்படு கின்றன. ஆனால் நகர்புற ஆலயங்களில் சுத்த சைவப் பிரசாதங்களையே படைக்கின்றார்கள்.

பேச்சிஅம்மன் முக்கியமாக கர்பவதிகளுக்கு பாதுகாவலராக இருப்பவள். கர்பமுற்றவர்கள் சுகப் பிரசவம் அடையவும், வயிற்றில் வளரும் குழந்தைகள் நலமாக பிரசவம் ஆகவும் அவளுடைய அருள் தேவை.


தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572

# திமிர் பிடித்த கொள்ளைக்காரனை

# கதற விட்ட தேங்காய்

கிராமவாசி ஒருவர் தனது தோட்டத்தில் பல தென்னங்கன்றுகளை நட்டார். தனது தோட்டத்தில் விளைந்த தென்னை மரங்களில் இருந்து காய்க்கும் முதல் அறுவடையில் வரும் தேங்காய்களை குருவாயூரப்பனுக்குக் காணிக்கை அளிப்பதாய் சங்கல்பம் எடுத்து கொண்டார்.

மரங்கள் காய்க்கத் தொடங்கிய போது, அவர் மரங்களில் இருந்து முதல் தேங்காய்களைச் கோணிப் பையில் சேகரித்து கொண்டு குருவாயூர் கோவிலுக்குப் நடை பயணித்தார்.

போகும் வழியில் ஒரு கொள்ளைக்காரன் வழிமறித்து "கோணிப் பையில் உள்ளதைக் கொடுத்துவிடு" என்று அவரை மிரட்டினான். அந்த கிராமவாசியோ, "இந்த கோணிப் பையில் வெறும் தேங்காய்கள் மட்டுமே உள்ளன. அது உனக்கு உதவாது என்றார்

அவை குருவாயூரப்பனுக்கு எனது காணிக் கையாக எடுத்து செல்கிறேன் இது நைவேத்திய தேங்காய் இதை தர முடியாது' என்று மேலும் கூறினார்.

கொள்ளைக்காரன் அலட்சியமாக, "குருவாயூ ரப்பனின் தேங்காய் என்று எங்காவது எழுதி இருக்கிறதா? இல்லை அதற்குக் என்ன பிரத்யேக மாக கொம்புகள் இருக்கிறதா என்ன? என்று கூறிக் கொண்டே கிராமவாசியின் கைகளில் இருந்து கோணி பையைப் பற்றி இழுத்தான்.

கோணி பையிக்குள் இருந்த தேங்காய்கள் வெளியே சிதறின அதிசயப்படும்படியாக ஒவ்வொரு தேங்காய்க்கும் கொம்பு முளைத்திருந்தது!

கிராமவாசியின் பக்தியும் குருவாயூரப்பனின் இச்செயலையும் கண்ட திருடன் மனம் திருந்தி, குருவாயூரப்பனிடம் மன்னிப்பு கேட்டு, அந்த கிராமவாசியைப் போக வழிவிட்டான்.

கிராமவாசியும் தான் வேண்டிக்கொண்டபடியே தேங்காய்களைக் கோயிலில் காணிக்கையாகக் கொடுத்தான்.

இன்று கூட பக்தர்கள் அந்த கிராமவாசி காணிக்கையாக கொண்டு வந்த கொம்புகள்




உள்ள தேங்காய்களை, குருவாயூர்க் கோயிலின் முன் மண்டபத்தில் கட்டப்பட்டிருப்பதைப் பார்க்க லாம்.

குழந்தை குருவாயூரப்பன் நினைத்தால் தேங்காய்களுக்கும் கொம்புகள் முளைக்கும்..... நாம் குருவாயூரப்பனை நினைத்தால் நம் வாழ்வு ஒவ்வொரு நாளும் சிறக்கும்.

# பக்தி வந்தா இப்படித்தான் நடக்கும்




மகா பெரியவா ஆந்திரா பக்கம் பாதயாத்திரை செய்து கொண்டிருந்த சமயம் அது அப்போது ஒருநாள் பௌர்ணமி வந்தது.

சன்யாச தர்மப்படி பௌர்ணமி நாளில் வபனம் (க்ஷவரம் செய்து முடிகளை அகற்றுவது) செய்து கொள்ள வேண்டும். ஆசார்யா யாத்திரை செய்து கொண்டிருந்ததால், தெலுங்கரான நாவிதர் ஒருவரை அதற்காக அழைத்துக் கொண்டு வந்தார்கள்..

ஆந்திராவில் சுற்றுவட்டாரத்திலேயே மகாபெரியவா, மேலும் சில மாதங்கள் யாத்திரை செய்ததால், அடுத்தடுத்த பௌர்ணமி நாட்களிலும் அதே நாவிதர் வந்து வபனம் செய்தார். பிறகு ஒரு கட்டத்தில் அந்த நாவிதர் காஞ்சி மடத்திற்கு அழைத்து வரப்பட்டு, பெரியவா சேவைக்கு அமர்த்தப்பட்டார். ஆரம்பத்தில் மகா பெரியவாளின் மகத்துவம் எதுவும் அவருக்குத் தெரியாது. யாரோ ஒரு சன்யாசிக்குத்தான் வபனம் செய்கிறோம் என்பதுபோல்தான் அவர் இருந்தார்

ஆனால், நாளாக நாளாக எத்தனை எத்தனையோ ஜன்மாக்களில் செய்த பலனால், மகானைத் தொட்டுத் திருத்தொண்டுசெய்யும் பாக்கியம் கிடைத்திருக்கிறது என்று உணர்ந்து கொண்ட அவர், அதனால் பூரண பக்தியோடு வந்து, மிகுந்த சிரத்தையோட பணி செய்தார்.

அப்படி வந்த சமயங்களில் எல்லாம், பக்தர்கள் பலரும்

பரமாசார்யாளுக்கு பலப்பல காணிக்கைகளைத் .தருவதைப் பார்த்தார். மகாபெரியவாளுக்கு தானும் ஏதாவது தரவேண்டும் என்ற ஆசை, அவருக்குள் தோன்றி வேகமாக வளரத் தொடங்கியது.

மகா பெரியவாளுக்கு ஏழ்மையான இந்த பக்தர் எதைக் கொண்டு வர முடியும்? காவியேறிய துணியில் நிறைய புற்று மண்ணை மூட்டையாகக் கட்டி,அதையும் மாங்குச்சியையும் (இவை இரண்டும் மகான் உபயோகிப்பவை) ஒவ்வொரு முறையும் எடுத்து வருவார். ஆசார்யா முன் அதை சமர்ப்பித்துவிட்டு, தன் பணியைச் செய்துவிட்டு விடைபெறுவார்

பெரியவா முன் அவர் விரும்பாமலேயே பக்தர்கள் சமர்ப்பிக்கும் பழங்கள், பாதாம், முந்திரி, பிஸ்தா போன்றவை, விலை உயர்ந்த சால்வைகள்,தங்க நாண்யங்கள், இத்யாதி, இத்யாதியான பலப்பல கணிக்கைகளுக்கு இடையே, நாவிதர் சமர்ப்பித்துச் செல்லும் அழுக்கு மூட்டையும் இருக்கும்.பக்தியோட அளித்த அதுவே மகாபெரியவாளுக்கு மகத்தான காணிக்கையாகத் தெரியும்.

ஆனால், நாவிதர் அதனை உணரவில்லை. வழக்கம் போல் ஒரு பௌர்ணமியன்று வந்தவர், அன்று புற்றுமண் வைத்து தட்டில்,விலை உயர்ந்த பழங்கள், தேங்காய், திராட்சை என பலப்பல காணிக்கைகளோடு, கொஞ்சம் ரூபாய் நோட்டுக்களையும் வைத்து எடுத்து வந்து சமர்ப்பித்தார்.

வழக்கம்போல், மடத்து தொண்டர் ஒருவர், அந்த மூங்கில்தட்டை எடுத்துச் சென்று மகான் முன் சமர்ப்பித்தார். இருந்ததை இருந்தவாறே அறியும் மகானுக்கு அது யார் தந்தது என்று தெரியாதா என்ன? இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல், " இன்னிக்கு அந்த தெலுங்கர் வரலையோ?" என்று அறியாதவர் போல கேட்டார்

அவர்தான் கொண்டுவந்து இதை சமர்ப்பித்தார் என்று தொண்டர்கள் சொல்ல, கொஞ்சம் தொலைவில் நின்றிருந்த அந்த நாவிதரைப் பார்த்தார் மகான். "உனக்கு ஏது இவ்வளவு பணம்?"... தன்மேல் அவருக்கு உள்ள பக்தியை வெளிப்படுத்த வேண்டும் என்றே அந்தக் கேள்வியைக் கேட்டார்

"சாமி... எல்லோரையும் போல உங்களுக்கு என்னால ஏதும் கொண்டுவந்து தரமுடியலையேன்னு, ரொம்ப வருத்தமா இருந்துச்சுங்க. அதனால என்னோட குடிசையை வித்துட்டேங்க.!"

"குடிசைன்ன அதுல நீ மட்டும்தான் இருந்தியோ?" மகானின் குரலில் கனிவு தெரிந்தது.

"இல்லீங்க, பொண்டாட்டி, குழந்தைகளோட தான் இருக்கேன். அவங்களைத் தெருவுல ஒரு மூலையில இருக்கச் சொல்லிட்டு வந்திருக் கேன்க,!"

அவர் சொல்லி முடிக்க, அங்கிருந்த மற்ற பக்தர்களுக்கு, மகாபெரியவா மீது நாவிதர் வைத்திருந்த பரிபூரண பக்தி தெரியவந்தது. அவரது திருப்பணிக்கு நிகராக தாங்கள் எதையுமே செய்ய முடியாது என்று புரிந்து கொண்ட அவர்களின் நெஞ்சம் நெகிழ்ந்து கண்களில் நீர் நிறைந்தது.

குடும்பத்தையே தெருவில் நிறுத்திவிட்டு உடைமைகள் அத்தனையையும் தன் மீது கொண்ட பக்திக்காக சமர்ப்பித்து நிற்கும் நாவிதரின் பக்தி மேன்மையை அனைவரும் அறிய வேண்டும் என்பதற்காக மகான் நடத்திய நாடகம்தான், "தெலுங்கர் வரலையா?" என்று அவர் கேட்டது என்பதைப் புரிந்து கொண்ட எல்லோரும், ஜயஜய சங்கர, ஹரஹர சங்கர என்று குரல் எழுப்பினார்கள்.

பக்தி என்பது மனதில் புகுந்தால், அது அன்பு வடிவமாக மாறி சுயநலம் நீங்கி, இறைவனுக்காக எதையும் செய்யத் தூண்டும் என்பதற்கு இந்த நாவிதரின் செயலும் எடுத்துக்காட்டாக அமைந்தது.

அடியார்க்கு வீடுபேறு தரவல்ல ஈசனின் அம்சமான மகாபெரியவா, தன்னிடம் பரிபூரண பக்தி கொண்டிருந்த அந்த நாவிதருக்கு நிரந்தரமானதொரு வீட்டைக் கட்டித் தரும்படி உத்தரவிட்டார்.



# ராசி பலன்கள்

**மேஷம் ராசி அன்பர்களே உங்களுக்கு**

உங்களுடைய முயற்சிகள் வெற்றி பெறும் மாதமாக இந்த மாதம் அமையும். மனைவியின் உடல் நலனில் அதிக அக்கறை தேவை. பணவரவு சீராக இருக்கும். தொழிலில் மந்த நிலை காணப்படும். வெளிநாட்டுதொடர்புகளால் நன்மைகள் நடக்கும். பூர்வீக சொத்துக்களால் சிக்கல்கள் ஏற்படும். குலதெய்வ அனுக்கிரகம். உண்டாகும்.நீண்ட நாட்களாக வரவேண்டிய பணம் வந்து சேரும். நீண்ட நாட்களாக குழந்தை இல்லாதவர்களுக்குகுழந்தை பாக் கியம் கைகூடும். வீடு. வாகன மூலம் செலவுகள் அதிகரிக்கும்.



**ரிஷபம் ராசி அன்பர்களே உங்களுக்கு**

அரசாங்கதால் நன்மை ஏற்படும் செலவுகள் குறை யும் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும் பெரிய அளவிலான கடன்களை கட்டிமுடிபீர்கள் உடல்நலனில் கவனம் தேவை வீண் வாக்கு வாதத்தை தவிர்த்து கொள்வது நல்லது பெரியோரின் ஆசீர்வாதம் கிடைக்கும் வழக்கு விஷயங்களில் வெற்றிகள் வந்து சேரும் மாணவர்களுக்கு படிப்பில் நல்ல முன்னேற்றம் உண்டு குழந்தைகளால் மகிழ்சிகள் வந்து சேறும் மாத தொடக்கத்தில் லாபம் அதிகமாக இருக்கும் சுப செலவுகள் எற்படும். வீடு கட்டும் யோகம் உண்டு.

**மிதுனம் ராசி அன்பர்களே உங்களுக்கு**

குடும்பதில் சுப நிகழ்சிகள் நடைபெறும் குழந் தைகளால் மகிழ்ச்சிகள் அதிகரிக்கும் தொழில் மூலம் வருவாய் அதிகரிக்கும் மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்துவதுநல்லது திருமண வயதில் உள்ளவர்களுக்கு திருமணம் கைகூடும் தொழிலில் போட்ட திட்டங்கள் வெற்றியை தேடிதரும் வீடு வாகன சேர்க்கை ஏற்படும் தந்தை வழி உறவுகளால் வர வேண் டிய சொத்துக்கள் வந்து சேரும். ஆரோக்கியம் மேம்படும் வேலையில் சாதகமான சூழ் நிலை ஏற்படும் வெளியூர் பயணங்களை மேற்கொள் வீர்கள். ஆரோக்கியதில் அதிக கவனம் தேவை. அரசாங்க ஆதரவு உண்டு. முயற்ச்சிகள் அனைத்தும் வெற்றி பெறும்.

**கடகம் ராசி அன்பர்களே உங்களுக்கு**

குடும்பதில்ஒற்றுமை அதிகரிக்கும் செலவுகள் அதிகரிக்கும் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணப்படும் புதிய தொழில்களை தொடங்கு வீர்கள் உயர் அதிகாரிகளால் நன்மை ஏற்படும் உங்க ளுடைய திட்டங்களில் கவனம் தேவை சகஊழியர்களிடம் பேசும்போது கவனமாக பேசவும் திடீர் பண வரவுகள் ஏற்படும் கடன் பிரச்சனைகள் முடிவுக்குவரும் நீண்டநாட்களாக வர வேண்டிய பணம் வந்து சேரும் இந்த மாதம் தொழில் நன்றாக இருக்கும் மாணவர்களுக்கு மிகசிறந்த காலம் திருமண முயற்சிகளில் கவனம் தேவை பூர்வீக சொத்துக்களால் பிரச்சனைகள் உண்டாகும். வீடு வாகன யோகம் உண்டு.

**சிம்மம் ராசி அன்பர்களே உங்க ளுக்கு**

இந்த மாதம் லாபகரமான மாதமாக அமையும். சுப விரயங்கள் ஏற்படும்பதவி உயர்வு ஏற்படும் கல்வியில் நல்ல முன்னேற் றம் காணப்படும் குடும்ப உறவுகளில் விட்டுக் கொடுத்து போவது நன்மையை தரும்புதிய முயற்சிகளில் கவணம் தேவை . நீண்ட நாட்களாக திருமானமாகாதவர்களுக்கு திருமணம்கைகூடும் தொழிலுக்காக கடன் வாங்குவீர்கள் உயர்அதி காரிகளால் பாராட்டபடுவீர்கள் வசதிகள் அதி கரிக்கும் தான தருமங்கள் செய்வீர்கள் ஆன்மீக சுற்றுல்லா குடும்பதுடன் சென்று வருவீர்கள் தர்ம காரியங்களில் ஈடுபடுவது நன்மையை தரும்.

**கன்னி ராசி அன்பர்களே உங்களுக்கு**

பணவரவு அதிகரிக்கும் தொழிலில் லாபங்கள் அதிகரிக்கும் எதிர்பாராத பணம் வந்து சேரும் ஆன்மீக பயணம் செல்வதற்கான வாய்புகள் ஏற்படும் புதிய வீடு,வாகன,பொருள் சேர்க்கை எற்படும்.மனைவியிடம் கருத்து வேறுபாடுகளை தவிர்ப்பது நல்லது உத்தியோக உயர்வு உண்டு, ஆரோக்கியம் மேம்படும் வேலையில் மாற்றம் எற்படும் குடும்பதில் மகிழ்ச்சிகள் நிலவும்.



**1.07.2021 முதல்**
**15.07.2021 வரை**

**ஜோதிடர் ஜெய் ஸ்ரீராம்**
DME.,BA.,MA.,(ASTROLOGY)
**மயிலாடுதுறை**
CELL 9487215736

கொடுக்கள் வாங்களில் கவணம் தேவை. அரசாங்க ஆதரவு உண்டாகும்.பணியின் காரணமாக வெளியூர் செல்ல நேரிடும். மானவர்களுக்கு கல்வியில் மந்தமான சூழல் உண்டாகும்.

**துலாம் ராசி அன்பர்களே உங்க ளுக்கு**

குலதெய்வ வழிபாடு நன்மையை தரும். தொழிலில் மாற்றங்கள் செய்ய வேண்டாம்,பொருளாதார சிக்கல்கள் ஏற்படும் குடும்பத்தில் கருத்து வேறுபாடு அதிகரிக்கும் கொடுக்கள் வாங்களில் கவணம் தேவை திருமண முயற்சிகளில் தொய்வு ஏற்படும் மாணவர்கள் படிப்பில் அதிக கவணம் செலுத்த வேண்டும். கடன்பிரச்சனைகள் தீரும் படிப்பில் பின்தங்கிய நிலை காணப்படும். தந்தை வழி சொத்துக்களால் ஆதாயம் உண்டாகும். நீண்ட நாட்களாக குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும்.

**விருச்சிகம் ராசி அன்பர்களே உங்களுக்கு**

திருமணம் கைகூடும் பணவரவு அதிகரிக்கும் நிதானமாக செயல்படுவது நல்லது வெளிநாட்டு தொடர்பான விஷயங்களில் வெற்றிகள் வந்து சேரும் மாணவர்களுக்கு படிப்பில் கவனக்குறைவு ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு உண்டு. வீண் செலவுகள் அதிகரிக்கும். தொழிலில் மந்த நிலை உண்டாகும். முக்கிய முடிவுகளில் கவனம் தேவை எதிரிகளால் பிரச்சனைகள் எயற்படுவதற்க்கு வாய்ப்பு உள்ளது வெளிநாட்டு வேலை கிடைக்கும் குடும்பதில் ஒற்றுமை நிலவும் குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கூட்டு தொழிலில் அதிக கவனம் தேவை.

**தனுசு ராசி அன்பர்களே உங்களுக்கு**

உங்களுடைய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் தேவைக்கு அதிகமாக பணம் கிடைக்கும் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்த்து கொள்ளவும் மனைவியின் அன்பு அதிகரிக்கும் ஆன்மீக பயணங்களை மேற்கொள்வீர்கள் அனைத்து விஷயங்களிலும் பொறுமையாக செயல்படுவது நன்மையை தரும் பொருளாதார வளர்ச்சி நன்றாகவே இருக்கும் வேலையில் உள்ள பிரச்சனைகள் தீரும் பெரியோர்களின் ஆலோசனைபடி செயல்படுவது நல்லது மாணவர் களுக்கு படிபில் மந்தநிலை காணப்படும். உங்களுடைய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் தேவைக்கு அதிகமாக பணம் கிடைக்கும் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்த்துகொள்ளவும். கூட்டுதொழிலில் லாபம் அதிகரிக்கும்.

**மகரம் ராசி அன்பர்களே உங்களுக்கு**

பணவரவு நன்றாக இருக்கும். உடல்நலனில் கவணம் தேவை. வீண் வாக்கு வாதத்தை தவிர்த்து கொள்வது நல்லது பெரியோரின் ஆசீர்வாதம் கிடைக்கும் வழக்கு விஷயங்களில் வெற்றிகள் வந்து சேரும் குழந்தைகளால் மகிழ்சிகள் வந்து சேறும் மாத தொடக்கத்தில் லாபம் அதிகமாக இருக்கும். தொழிலில் புது புது சிந்தனைகள் மூலம் வெற்றிகள் உண்டாகும் செலவுகள் குறையும் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும் பெரிய அளவிலான கடன்களை கட்டிமுடிபீர்கள். தொழில் மாற்றங்கள் உண்டாகும். தந்தைக்கு நெருக் கடிகள் உண்டாகும். சொத்து பிரச்சனைகள் உண்டாகும்.

**கும்பம் ராசி அன்பர்களே உங்களுக்கு**

வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். கொடுக்கள் வாங்களிள் கவணம் தேவை பண வரவு சீராக இருக்கும் கௌரவம்அதிகரிக்கும் மனைவி மூலம் சொத்துகள் சேரும் நீண்ட நாட்களாக விற்பனையாகாத இடம் விற்ப னையாகும் கொடுக்கவேண்டிய கடன் களை கொடுத்து முடிபீர்கள் தொழிலில் லாபங்கள் அதிகரிக்கும் மனைவி மூலம் சொத்துகள் சேறும் ஊழைப்புகேற்ற ஊதியம் வந்து சேரும்குடும்பதில் பிரச்சனை நிலவும் மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். சிலருக்கு காதல் திருமணம் கைகூடும். குழந்தை செல்வம் உண்டாகும்.

**மீனம் ராசி அன்பர்களே உங்களுக்கு**

நீண்ட நாட்களாக திருமானமாகாதவர்களுக்கு திருமணம்கைகூடும் சுப விரயங்கள் ஏற்படும். தொழிலுக்காக கடன் வாங்குவீர்கள். ஆன்மீக சுற்றுல்லா குடும்பதுடன் சென்று வருவீர்கள். உயர் அதிகாரிகளின் நட்பு எற்படும்.ஆரோக்கியம் சீராக இருக்கும்.செலவீனங்களை குறைத்து கொள்வது நல்லது புது முயற்சிகள் வெற்றியை தேடி தரும் பூர்வீக சொத்துக்களால் ஆதாயாம் உண்டாகும் திருமணமாகி நீண்ட நாட்களாக குழந்தைபாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந் தைபாக்கியம் உண்டாகும்.

# ஆணவம் + ஆசையின் கூட்டுக் கலவையே மனிதன்

புத்தியைப் பிடிக்க புத்தகத்தைத் தேடாதே. சிந்தனை புத்தகத்தையே தேடும்.

❖❖❖

குருவி கூடு கட்ட, உரிமட்டை நாரை ஒவ்வொன்றாக எடுத்துச் செல்லும். கடவுள் தரிசனம் செய்ய பல மந்திரங்களைச் சொல்லாதே... "ஒரு மந்திரமே போதும்''!!

❖❖❖

உன்னிடம் ஓய்வு ஒழிவு இன்றி செயல்படுவது எது? உனது புத்தி ஒன்றே. அதனால் நாட்டில் அதை எவருமே இழப்பதில்லை.

❖❖❖

எரிகின்ற தீவட்டியில் தூசு தும்பு விழாது. விழுந்தாலும் எரிந்து விடும்.

❖❖❖

"மாட்டுக்குத் தேவைப்படுகின்ற வைக்கோல் முதலில் உற்பத்தி ஆவதில்லை. அறுவடைக்குப் பின்பே கிடைக்கிறது. குருவை பின்பற்றுங்கள். முதலில் புத்திக்குப் புலப்படாத விஷயங்கள் அனைத்தும்...உலகம் புரிந்த பின்பு, பிறகு புரியும்''

❖❖❖

தீவட்டி போல் வாழ்க்கை இருக்க வேண்டும்.

❖❖❖

குருவை ஏற்றுக் கொள். பணிவு உடனே பிறந்துவிடும்.

❖❖❖

அறிவை சரி பார்த்துக் கொள். பணிவு பிறந்துவிடும்.

❖❖❖

இறைவனுக்காக உடம்பு அடிமையாக வேலை செய்து தேய்ந்து கொண்டே இருந்தால் பக்தி ரசம் ஏற்பட்டுவிடும்.

❖❖❖

தரிசனம் கண்டால் சந்தேகம் எல்லாம் நிவர்த்தி.

❖❖❖

மனிதனுக்கு பழைய ஞானமும், புதிய ஞானமும் வரவேண்டும். வந்தால் நிம்மதி.

❖❖❖

நம் பணி என்றென்றும் உண் மைக்கு பணி செய்து கிடப்பதே.

❖❖❖

புத்தியை புரிந்து கொண்டவனே கடவுளை மெய்யாக்குகிறான்.

❖❖❖

தவளை ஓயாமல் வற..வற..என்று கத்திக் கொண்டே இருந்தது. ஓயாமல் நானும் கடவுளையே சொல்லுகிறேன். ஒரு பக்தன் இருக்கிறான் என்பதை நாடு இதனால் உணருகிறது!!

❖❖❖

புராதன பழைய கோட்டை கொத்தளங்களில் நீ குடியேறி வாழ்ந்தாலும்...நீ பழைய சுல்தானுமல்ல, புதிய பஹதுார்ஷாவுமல்ல.

❖❖❖

ஞானிகளோடு, நீ உன்னை ஒப்பிட்டுக் கொண்டு அழியாதே.

❖❖❖

இந்தப் பிறவி புத்தியை.. உபயோகி! முன்னேறு!!

❖❖❖



டிக்கெட் இல்லாமல் ரயில் ஏறி ஊர் போய்ச் சேர்ந்து விடுவான் குறவன். அதுபோல பழைய புண்ணியம் இருந்தால், பூஜை இல்லாமலேயே அருள் பெற்றுவிடுவாய்!!

❖❖❖

சிந்தனையை துாண்டுவது என்பதே ஒரு நேருக்கு நேரான பணி தான்.




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன் நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**


❖❖❖

இப் பிறவியை அடுத்த பிறவிக்குப் பயன்படுத்திக்கொள்.

❖❖❖

சந்தேகத்துடன் பூசை செய்யும் மனிதனுக்கு அவன் வீட்டளவில் தான் செல்வாக்கு. சந்தேகமே வராமல் இறைவனுக்கே அனைத்தும் என்று சொல்லும் பக்தனின் செல்வாக்கு உலகமெல்லாம் பரவுகிறது.

❖❖❖

“பிறப்பும் இறப்பும் உனக்குத் தெரியாது. இது மனிதனுக்குத் தெரிய வேண்டாம். இடையிலே உள்ள சிந்தனை தெரிந்தால் போதும் அதுவே லாபம்’’!!.

❖❖❖

ஆடு எதற்காகப் பிறந்தது என்று அதற்குத் தெரியவே தெரியாது. நீ ஆத்ம விசாரணை செய்யாவிடில், நீயும் எதற்காக வந்தாய் என்பது புரியாமலேயே போய்விடும்.

❖❖❖

வீடு, மாடு, சொத்து இவைகளை சொந்தம் கொண்டாட முடியும். சிந்தனையாளனாய் இரு. நானே உலகில் சிந்தனையாளன் என்று உலகை சொந்தம் கொண்டாட முடியும்.

❖❖❖

“காக்கை ஒரு குறிப்பிட்ட காலத்தில் கூடுகட்டி முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். அதுபோல ஆண்டவன் உனக்கு அருள்செய்து உன்னை ஆட்கொண்டுவிடுவான்”!!

❖❖❖

நியாயம் என்பது தியாகம் விளங்குகின்ற தன்மை. தியாகம் என்பது விளங்குகின்ற மனிதர்களைப் பார்த்தல்.

❖❖❖

உணவுக்கு மேல் எந்த அரசியலும் செய்யலாகாது. அரசியல் உணவில்தான்; வேறு எதிலும் இல்லை.

❖❖❖


உணவுக்கு மேல் எந்த அரசியலும் செய்யலாகாது. அரசியல் உணவில்தான்; வேறு எதிலும் இல்லை.


❖❖❖

நாடு புத்தனை ஒதுக்கிவிட்டதால் நேருக்கு நேரான பணி சிந்தனை துறையில் இல்லை.

❖❖❖

நீ சிந்தித்து செயல்பட துவங்கி விட்டாய் என்பது குருவுக்குத் தெரியவேண்டாம். நீ உணர்ந்தால் போதும்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# எந்த விதத்தில் முடியுமே அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், 'நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?' என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி 'நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?' என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரி சாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலி யில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், 'என்னால் இதற்கு மேல் பண்ணச் சக்தி இல்லையே!' என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்பவ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.




முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் சமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.

எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத்தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். 'பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்' என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வராநுக்ரஹமும் வரும்.

எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

– தெய்வத்தின் குரல்

# விக்னம் தீர்க்கும் விநாயகரின் சிறப்புகள்




## எமனை விரட்டும் விநாயகர்

திருப்பைஞ்ஞீலி தலத்திலுள்ளஎமன் கோயிலின் நுழைவாசலுக்கு முன் பாக உள்ள விநாயகர் தெற்கு திசையை நோக்கியபடி நின்ற நிலையில் காட்சி தருகிறார்.

இவர் இடது காலை ஊன்றி, வலது காலைத் தூக்கி உதைக் கும் நிலையில் காணப்படுகி றார். அதாவது தெற்கு திசை யில் உள்ள எமன் இங்கு வந்தால் எதிர்ப் புத் தெரிவிக்க உதைக்கும் நிலையில் இந்தத் தோற்றம் என்கின்றனர். நோய் நொடியின்றி வாழ இவர் அருள் புரிகிறார்.

## இங்க் பிள்ளையார்

திருவாரூரில் கமலாலத் தீர்த்தக் குளத்தின் கீழ்கரையில் அமர்ந்துள்ள பிள்ளையார் இங்க் பிள்ளையார் என்று அழைக்கப்படுகிறார்.

தேர்வுக்குச் செல்லும் மாணவர்கள் இந்த பிள்ளையார் முன்பு பிரார்த் தனை செய்தவாறு இங்க்'கை (பேனா மையை) விநாயகர் மீது உதறிவிட்டுச் சென்




றால் தேர்வில் எளிதில் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை நிலவி வருகிறது.

## தலையைத் திருக தினம்

திருவண்ணாமலையில் கிரிவலம் வரும் வழியில் ஓர் அதிசய விநாயகர் காணப்படுகிறார். தலையைத் திருக தனம் கொடுக்கும் விநாயகர் என்பது இவரது திருப்பெயர்.

இந்த விநாயகரின் தலையைத் தனியாக எடுத்தால் உள்ளே கையளவு சுரங்கம் இருக்கிறது. அச்சுரங்கத்தில் காசுகளைப் போட்டு மீண்டும் எடுத்துக் கொண்டால் செல்வம் சேரும் என்பது ஐதிகம்.

## தாலி கட்டிக் கொள்ளும் பிள்ளையார்

மதுரை வடக்கு மாசி வீதியில் உள்ளநேரு ஆலால சுந்தர விநாயக கோயிலில் கன்னிப்பெண்கள் வெள்ளக் கிழமைதோறும் கூடுகிறார்கள்.

அவர்கள் வயதுக்குத் தக்கபடி 16,21,26,32 என்றபடி விரளி மஞ்சளை தாலிக்கயிற்றில்கட்டி பிள்ளையாருக்கு அணிவித்து பிரார்த்திக்கின்றனர்.

இவ்வாறு வழிபட்டால், நவக்கிரக தோஷம் விலகி நல்ல கணவர் அமைவார் என்றும் நம்புகின்றனர்.

## குட்டுப்படும் பிள்ளையார்

நரிமணம் என்ற ஊரிலுள்ள பிள்ளையார் தினமும் குட்டுப்படுகிறார். இங்கு பிள்ளையாரை வணங்குபவர்கள் அவர் தலையில் குட்டிவிட்டுத்தான் வணங்குவர்.

## டிரவுசர் விநாயகர்

சைனாவில் ஓர் ஆலயத்தில் உள்ள விநாயகர், சைனாக்காரர்கள் உடுத்தும் டிரவுசர் அணிந்து காட்சி தருகிறார். அவர் குறுங்காற் சட்டை விநாயகர்' என்றும் அழைக்கப்படுகிறார்.


ராஜாமணி

## சங்கு பாணி விநாயகர்

பெரிய காஞ்சிபுரம் உலகளந்தார் தெருவில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது சங்கு பாணி விநாயகர் கோயில். பிள்ளையார் இங்கு புதுமையாக சங்கு வடிவில் காட்சியளிக்கிறார்.

திருமாலுக்கு விநாயகர் சங்கு ஒன்றைத் தந்ததாகவும், பின்னர் அந்தச் சங்கே விநாயகராக மாறியதாகவும் புராணம் கூறுகிறது.

## கௌபீன கணபதி

திருகம்பகம் என்னுமிடத்தில் கணபதி கௌபீன தாரியாகக் காட்சி தருகிறார். இவரைக் காண பெண்களுக்கு அனுமதியில்லை.

## தும்பிக்கை இல்லாத பிள்ளையார்

தும்பிக்கை இல்லாத பிள்ளையாரை நன்னிலம், பூந்தோட்டம் அருகேயுள்ள திலதைப் பகுதியில் காணலாம். இங்கு இவர் வலது காலைத் தொங்கவிட்டு, இடது காலை மடித்து, இடது கையை இடதுகால் மீது வைத்து, வலது காலை சற்று சாய்த்து அபயக்கரத்துடன் விளக்குகிறார்.

## கமிஷன் கணபதி

அழகர் கோயிலுக்குச் செல்லும் வழியில் அப்பன் திருப்பதி கிராமத்திலுள்ள விநாயகர் தரகு விநாயகர் எனப்படுகிறார். இப்பகுதியில் விவசாயம் செய்யும் மக்கள் தங்கள் விளைநிலங்களில் விளைச்சல் சிறந்திருந்தால், ஒரு குறிப்பிட்ட அளவு தானியத்தை தரகு கமிஷனாக தருவதாக வேண்டிச் செல்வர்.

சிறந்த விளைச்சலுக்குப் பின் தாங்கள் வேண்டியபடி இங்கு வந்து காணிக்கை செலுத்துவர்.

தொகுப்பு: ராஜாமணி, சென்னை

தொடர்பு எண்: 94879 34050

# திருவண்ணாமலையை அங்க பிரதட்சனம் மூலம் வலம் வந்த பக்தை




ஆந்திர மாநிலம் பீமவரம் பகுதியை சேர்ந்த மாதவி என்ற பெண் திருவண்ணாமலை அரு ணாச்சலேஸ்வரர் மீது தீவிர பக்தி கொண்டவர்.

கொரோனா தொற்றில் இருந்து மக்கள் விடு பட வேண்டி ஒரு நாளைக்கு 2 கிலோ மீட்டர் வீதம் சிலநாட்கள் தொடர்ந்து திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் அங்கப் பிரதட்சணம் செய்திருக்கிறார்.

14 கிலோ மீட்டருக்கு மேல் இவர் அவங்க பிரதட்சணமாக வலம் வந்து இறைவனிடம் கோரிக்கை வைத்துள்ளது சிவ பக்தர்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

45 வயதாகும் தீவிர சிவ பக்தையான இவர் அண்ணாமலையார் மீது கொண்ட ஈர்ப்பால் 15 வருடத்திற்கு முன்பு திருவண்ணாமலைக்கு வந்து தங்கி விட்டார். தனது பெயருக்கு முன்னால் அருணாச்சலம் என்பதையும் சேர்த்துக் கொண்டு ஆன்மீக பணியாற்றி வருகிறார்.

இவர் ஏற்கனவே, திருவண்ணாமலை கிரி வலப் பாதையில் 3 முறை அங்கப்பிரதட்சணம் செய்திருக்கிறார்.

ஊரடங்கு காலத்திலும் கடும் கட்டுப்பாடு இருந்த சமயத்திலும் இறைவன் மீது கொண்ட பக்தியின் காரணமாக, யாருக்கும் எந்த இடை யூறுமின்றி இவர் இந்த அங்கப்பிரதட்சணம் செய்திருப்பது சிறப்பு.

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

# கோமாதா பூஜை

## செய்யும் முறை






கோ என்றால் உலகம். உலகில் உள்ள சகல ஜீவன்களுக்கும் தனது பாலை எடுத்துத் தரும் தாய் போல் விளங்குவதால் தான் அதை கோமாதா என்று பதிவுடன் அழைக்கிறோம். ஆதிசங்கரரிடம் `அன்னை போன்றவள் யார் என்று கேட்டதற்கு பசு என்று சொல்லி அதனைப் பெருமைபட வைத்திருக்கிறார்.

இந்த சக்தி உடைய பசுவை பூஜை செய்வ தால் நமக்குப்பேறுகளும் திருமகள் பார்வையும் தெய்வங்களின் ஆசியும் கிடைக்கும். கோமாதா பூஜையை வெள்ளிக்கிழமையில் செய்தால் துர்சக்திகள் வீட்டை நெருங்காது. செவ்வாயன்று செய்தால் சுப காரியங்கள் வீடு தேடி வரும். பவுர்ணமி தினத்தன்று செய்தால் மகாலட்சுமி நம் வீட்டில் நித்தியவாசம் புரிவாள் என்று புராணங்கள் கூறுகின்றன.

மகாலட்சுமிக்குரிய பூர நட்சத்திர நாளில் கோ பூஜை செய்வதால் கணவன்மனைவிக்கு இடையே அன்னியோன்யம் பெருகி அன்பின் அஸ்திவாரம் பலப்படும். பல்வேறு பலன்களை அள்ளித் தருகிற, அற்புத சக்தி வாய்ந்த `கோமாதா பூஜை' செய்யும் முறையைப் பார்க்கலாம். வீட்டில் பசு இருப்பவர்கள்தான் இந்த பூஜையைச் செய்ய வேண்டும் என்பதில்லை.

பசு இல்லாதவர்களும் பசு வைத்திருப்பவர் களிடம் கொஞ்ச நேரத்துக்கு வாங்கி, இந்த பூஜையை செய்து விட்டு பசுவைத் திருப்பித் தரலாம். `பூஜைக்காக பசுவைத் தந்து உதவுபவர்கள் பசுவையே தானம் செய்த புண்ணியத்தைப் பெறுகிறார்கள்' என்று சாஸ்திரம் சொல்கிறது. முதலில் பசுவுக்குரிய அருகம்புல், அரிசி, வெல்லக் கலவை, வாழைப்பழம், தேங்காய், தாம்பூலம், பால் சாதம், பூமாலை மற்றும் பூஜைக்குரிய பொருட்களை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

பசுவை கன்றுடன் அழைத்து வந்து, குளிக்க வைத்து, கொம்புகளில் மஞ்சள் பூசி மாலை அணிவிக்கவும்.

அருகம்புல்லை கொடுத்து வீட்டுக்கு அழைப்பது போல ஸ்வாகதம்,

ஸ்வாகதம், கோமாதா ஸ்வாகதம்,
ஸ்வாகதம், மகாலஷ்சுமி ஸ்வாகதம்,
ஸ்வாகதம், அஷ்டலஷ்சுமி
என்று 3 முறை கூற வேண்டும்.

மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து,




சுமுகஸ் சைக தந்தஸ்ச ஹேரம்ப ஸ்கந்த பூர்வஜ என்று சொல்லி அதற்கு 16 மலர்கள் வைக்கவும். அல்லது `பாலும் தெளிதேனும்'என்று தொடங்கும் பாடலைப் பாடி, மலர் போட்டு, பழம், கல்கண்டு படைத்தும் ஆரத்தி காட்டலாம்.

பசுவின் முன் ஒரு பலகை வைத்து, அதன் மேல் காமாட்சி தீபம் (அ) கமல தீபம் என்கிற ஐஸ்வர்ய தீபத்தை (பொதுவாக இந்த தீபத்தை கேரளா, ஆந்திரா மற்றும் வடநாடுகளில் ஏற்றுவார்கள். நடுவில் குழாய் வடிவில் இருக்கும்) ஏற்றி வைக்கவும். எட்டு விதமான வாசனை மலர்களை எடுத்துக் கொண்டு, முதலில்`காமதேநே: ஸமுத் பூதே ஸர்வதாம பலப்ரதே த்யாயாமி ஸௌரபேயி த்வாம் வ்ருஷபத்னி நமோஸ்துதே என்று 3 முறை சொல்லவும்.

அடுத்தது, இந்த பூஜையின் முக்கிய அம்சமான அங்க பூஜை. கீழே தந்துள்ள மந்திரங்களை உச்சரித்தபடியே பசுவின் உடற்பாகங்களில் குங்குமத்தை இட்டு பூஜிக்க வேண்டும்.

இரண்டு கொம்புகளின் நடுவே ஓம் சிவரூபாய நம: வலக்கொம்பில்பிரம்மனே நம:

இடப்புறக் கொம்பில்விஷ்ணுவே நம:
வலக்காது நுனியில்தீர்த்தேப்யோ நம:
இடக்காது நுனியில்
ஸ்தாவர ஜங்கமேப்யோ நம:
மூக்கு நுனியில் ஜ்யேஷ்டாய நம:
வலது கண்ணில் சூர்யாய நம:
இடக் கண்ணில் சந்த்ராய நம:
பற்களில் மாருதாய நம:
தாடையில் வருணாய நம:
மேலுதடு யட்சேப்யோ நம:
கீழுதடு யமயே நம:
கழுத்தில் இந்த்ராய நம:
குளம்பு நுனி நாகேப்யோ நம:
குளம்பு நடுவேகந்தவர்வேப்யோ நம:
குளம்பு மேற்பாகம்அப்சரேப்யோ நம:
கால்களில் கணேப்யோ நம:
நாடிகளில் நேத்ரேப்யோ நம:
மடியில் ப்ருகுப்யோ நம:
மடி நுனியில் சாத்தேப்யோ நம:
இதயத்தில் உமாதேவ்யாய நம:
வயிற்றில் பூமிதேவ்யாய நம:
யோனியில் மகாலஷ்மியே நம:
தோள்களில் தேவேப்யோ நம:
பிறகு பிடித்து வைத்த
கோமயத்தில்பிரும்மனே நம:
கோ ஜலத்தில் விஷ்ணுவே நம:
நெய்யில் ருத்ராய நம:
தயிரில் ஈஸ்வராய நம:
பாலில் சதாசிவாய நம:
என்று சொல்லியபடி அர்ச்சனை செய்யவும்.
பிறகு கற்பூர ஆரத்தி காட்டி,

ஓம் சுரப்யை ச வித்மஹே காமதாத்ரேய தீமஹி தன்னோ தேனு:
ப்ரசோதயாத்: என்று சொல்லவும்.
அடுத்து குங்குமம், மலர்களால்..




ஓம் காமதேனவே நம:
ஓம் பயஸ்வின்யை நம:
ஓம் ஹவ்யகவ்ய பலப்ரதாயை நம:
ஓம் வ்ருஷபத்ன்யை நம:
ஓம் சௌரபேயை நம:
ஓம் மகாலக்ஷ்மியை நம:
ஓம் ரோகிண்யை நம:
ஓம் ஸ்ருங்கிண்யை நம:
ஓம் க்ஷீணரதாரிண்யை நம:
ஓம் காம்போஜ ஜனகாயை நம:
ஓம் பப்ல ஜனகாயை நம:
ஓம் யவன ஜனகாயை நம:
ஓம் மாஹேயை நம:
ஓம் நைசிக்யை நம:
ஓம் சபலாயை நம:
ஓம் ஸ்ரீம் காமதேனவே நம:
என்று சொல்லி அர்ச்சிக்கவும்.

பிறகு தூப, தீபம் காட்டி, பொங்கல், அரிசி, வெல்லக் கலவையை நிவேதனம்செய்து, தேங்காய், பழம் படைத்து அதற்கு ஆரத்திசெய்து, பிறகு அவற்றை பசுவுக்கு உண்ணக் கொடுக்கவும். பசுவை மூன்று முறை வலம் வந்த பிறகு,

கோமாதாவே... எங்கள் குலம் தழைத்திடவும் ஏற்றம் பெற்று வாழ்ந்திடவும் என்றும் பக்கத் துணையிருக்க திருமகள் அருளைக் கூட்டி நீடியே எட்டாத செல்வமும் எட்டவைப்பாய் பசியும் பிணியும் போக்கி விடும் பாலைத் தந்திடும் மாதாஜி செல்வத்திருவே போற்றியம்மா! என்று கூறி கோமாதாவைச சுற்றி வந்து விழுந்து வணங்கி அதன் பின்பகுதியை தொட்டு வழிபட வும். கோமாதாவின் வாழ்த்தினால் வளங்கள் பெருக வாழ்த்துகிறோம்.

## பசு உடலில் வேதங்கள்...

கோமாதா என்று போற்றப்படும் பசுவுக்கு ரிக்வேதம் பின்பக்கமாகவும், யஜீர்வேதம் நடுப் பகுதியாகவும், சாமவேதம் கழுத்தாகவும், இஷ்டம் பூர்த்தம் ஆகியன இரு கொம்பு களாகவும், அதன் உரோமங்கள், சகல சுத்தங்களாகவும், சாந்தி கர்மம் புஷ்டி கர்மம் ஆகியவை கோமய மாகவும், வேதம் வகுத்தெடுத்த நான்கு வருணங்களே பசுவின் பாதங்களாகவும், சுவாஹா, ஸ்வதா, வஷம், ஹந்த என்ற நான்கும் அதன் காப்புகளாகவும், இவற்றின் மூலம் தேவர்களையும் மானிடர்களை யும் ஊட்டி வளர்க்கிறாள் நம் கண் முன்னே தோன்றும் பெண் தெய்வமான கோ மாதா.

## லலிதா சகஸ்ர நாமத்தில் கோமாதா........

அம்பிகை வழிபாட்டில் அம்பாளின் ஆயிரம் நாமங்களைக் கொண்டு போற்றிப்பாடலாக உயர்ந்த சக்தி வேத மந்திரமாக விளங்குவது லலிதா சகஸ்ரநாம போற்றித் திருமாலை. அதில் 605வது நாமாவளி வரியாக வருவதுதான் கோமாத்ரே நம என்பது. இதன் பொருள் கோமாதா என்னும் தாய் போல விளங்குபவளே என்பதாகும். ஆம்! கோ மாதாவை வழிபடாத இலக்கியங்களோ, புராணமோ இக்கலியுகத்தில் இல்லை என்றே சொல்லலாம்

தொகுப்பு:

சித்தர்களின் ராஜ்ஜியம் ஆன்மிக குழு

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

# aanmeegamalar.com

# இணையதளத்தை பார்க்கவும்






















www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# மறுபிறவி அற்றவர்கள்

## சாஸ்திரம் கூறும் வழிமுறைகள்

மரணத்தோடு ஒரு மனிதனின் வாழ்க்கை முற்றுப் பெறுவதில்லை. அது மேலும் மேலும் தொடர்கிறது.

யாருக்கு மறுபிறவிகள் ஏற்படாது என்ற சந்தேகம் அனைவருக்கும் இருக்கும். இதற்கு சாஸ்திரங்கள், கருட புராணம், கடோபநிஷதம் போன்றவை மறுபிறவி, பற்றிய சில செய்திகளை குறிப்பிடுகின்றன.

பொதுவாக பூமியில் அனுபவிக்க வேண்டிய அனைத்தையும் அனுபவித்து முடிந்தவருக்கு மீண்டும் மறுபிறவி ஏற்படுவதில்லை.

இது கர்ம பூமியாதலால் தங்களது கர்மத்தை அனுபவிக்கவே உயிர்கள் பிறப்பெடுக்கின்றன. அவற்றை முற்றிலுமாக அனுபவித்து விட்டு, இனி அனுபவிக்க சஞ்சித கர்மா, பிராரப்த கர்மா, ஆகாம்ய கர்மா என ஏதும் இல்லாதவர்களுக்கு மறுபிறவி ஏற்படுவதில்லை.

இவ்வுலக ஆசைகள் ஏதும் இல்லாமல், பற்றற்ற வாழ்க்கை வாழ்பவர்களுக்கும், தவயோகிகளுக்கும் மறுபிறவி இல்லை.

சிறந்த தவத்துடனும் பக்தியுடனும் வாழ்ந்து, இறைவன் ஒருவனையே தங்கள் பற்றுக் கோடாகக் கொண்டு, தாங்கள் செய்யும் செயல்கள் அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணித்து வாழ்பவர்களுக்கு மறுபிறவி இல்லை.

தாங்கள் செய்த பாவக் கணக்கும், புண்ணியக் கணக்கும் சரியாகி கழிக்க ஏதும் கர்மவினைகள் இல்லாதவருக்கு மறுபிறவி ஏற்படுவதில்லை.

தன்னலம் கருதாது வாழ்ந்து மறைந்த மகான்களுக்கு மறுபிறவி இல்லை.

இறைவனின் கட்டளைப்படி மட்டுமே அவர்களது அவதாரம் நிகழும்.

பந்தம், பாசம், மோகம், அகந்தை, காமம் போன்ற மன அழுக்குகளிலிருந்து விடுபட்டு, இவ்வுலக வாழ்வை வெறுத்து, இறைவனையே சதா தியானித்து, அவன் நாமத்தையே எப்போதும் கூறி வரும் உண்மையான பக்தர்களுக்கு மறுபிறவி ஏற்படுவதில்லை.

நமது சாஸ்திரங்கள் கூறும் முறைப்படி பரமாத்மாவிலிருந்து பிரிந்து வந்த ஜீவாத்மாக்கள் அனைவரும், ஏதாவது ஒரு காலத்தில் அந்தப் பரமாத்மாவோடு இணைந்து தான் ஆக வேண்டும்.



# நல்லவற்றை பேசுங்கள் தீய பேச்சு

மனிதர்களை வேறுபடுத்தும் ஒரு விஷயம் என்னவென்றால், நாங்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ள, பேசுகிறோம். நம்மில் பெரும்பாலோர் தவறாமல் தொடர்ந்தும் நாள் முழுவதும் பேசுகிறோம். காலப்போக்கில், மக்கள் உரையாடும் முறை மாறிவிட்டது.

சிலர் விரோதமாகவும், மிகைப்படுத்தியும் பேசுகிறார்கள். மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கவும், தங்கள் எண்ணங்களை முன் நிறுத்தவும், இப்போதெல்லாம் பலர் சத்தமாக உரையாடுகிறார்கள். சமூக தொடர்புகளில் வசை சொற்களையும் பழி சொற்களையும் பயன் படுத்துவதும் வழக்கமாகிவிட்டது.

எங்களது ஆன்மீக ஆராய்ச்சியில் நாம் பேசும் விதமானது, தனக்கே உரிய ஆன்மீக அதிர்வுகளை கொண்டுள்ளது என்றும், இது நம்மையும் நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் பாதிக்கிறது என்பதையும் காட்டுகிறது.

இக்கட்டுரையில் மெதுவாக அல்லது சத்தமாக பேசுவதால் ஏற்படும் ஆன்மீக விளைவுகளையும், முறையற்ற சொற்களை பயன்படுத்துவதன் விளைவுகளையும் ஆராய்வோம்.

2. பழி சொற்கள் அல்லது வசை சொற்கள் பயன்படுத்துதலால் ஏற்படும் விளைவுகள் குறித்த ஆன்மீக ஆராய்ச்சி

பெரும்பாலான மொழிகளில் பொருத்தமற்ற தாகக் கருதப்படும் சில சொற்கள் உள்ளன. இச்சொற்களை வசை சொற்கள் அல்லது தகுதியற்ற பேச்சு என்றும் கூறுவார்கள்.

பெரும்பாலும் மக்கள் இச்சொற்களைகோபம், எரிச்சல் அல்லது ஆச்சரியம் போன்ற உணர் வுகளை வெளிப்படுத்தவும், அவமதிப்பு, துன்புறுத்தல் அல்லது நகைச்சுவை போன்றசமூக விளைவுகளை ஏற்படுத்தவும் பயன்படுத்து கிறார்கள். பதிவு செய்யப்பட்ட உரையாடல்களில், ஒவ்வொரு நாளும் பேசப்படும் சுமார் 8090 சொற்களில் 0.5% முதல் 0.7% வரை வசை சொற்கள் என்றும், இதன் பயன்பாடு 0% முதல் 3.4% வரை வேறுபடுகிறது என்று சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கிறது.

ஆன்மீக கண்ணோட்டத்தில், பிறர் கவனத்தை ஈர்ப்பதும் அல்லது எதிர்மறை உணர்வுகளை வெளிப்படுத்துவது போன்றவை, வசை சொற்களின் பயன்பாட்டிற்கு பின்னால் உள்ள பொதுவான நோக்கங்கள். இவை நம்மை கடவுளிடமிருந்து விலக்கி மாயை (மாயா) நோக்கி இழுக்கிறது. மேலும், எங்களது ஆன்மீக ஆராய்ச்சி மூலம் வசை சொற்கள், கஷ்டம் தரும் சக்தியை ஈர்க்கின்றன என்பதைக் காட்டுகின்றது. கடவுளின் நாமம் தெய்வீக அதிர்வலைகளை ஈர்ப்பது போல, தகாத சொற்கள் ஆன்மீக ரீதியாக எதிர்மறை அதிர்வலைகளை ஈர்க்கின்றன. எந்தவொரு அடிப்படை நோக்கமும் இல்லாமல் இச்சொற்களை பயன்படுத்தும்போதும் எதிர்மறையான ஆன்மீக விளைவுகளை கொடுக்கிறது.

வசை சொற்களால் ஏற்படும் சூட்சும விளைவுகளைப் பற்றி தனது அதிநுட்பமான ஆறாவது அறிவின் மூலம் திருமதி பூஜ்ய யோயா வாலே வரைந்த சூட்சும வரைபடத்தை கீழே பகிர்கிறோம். யோயாவின் சூட்சும அறி வை கொண்டு வரையப்பட்ட வரைபடங்கள் அனைத்தும் வெளியிடப்படுவதற்கு முன்பு பராத்பர குரு டாக்டர் ஆடவலே அவர்களால் சரிபார்க்கப்படுகின்றன.

வசை சொற்களால் ஏற்படும் சூட்சும விளைவு களை கீழே உள்ளபடத்தின் துல்லியமானது 80% ஆகும். இது சராசரி சூட்சும அல்லது ஞானதிருஷ்டி கொண்டு வரையும் கலைஞரின் திறனை விட மிக அதிகமாக உள்ளது.

சூட்சும ஞானத்தின் அடிப்படையில் வரையப்பட்ட படத்திற்கும் மற்றும் யோயாவின் அனுபவத்திற்கான விளக்கமும் பின்வருமாறு.

வசை சொற்களின் பயன்பாட்டால் அஹம் பாவம் செயல்படுத்தப்படுதல் வசைசொற்களின் அதிர்வுகளும் ஈர்ப்பு சக்தியும் (ஆகர்ஷன்சக்தி)

## வசைமொழி அல்லது பழிச்சொற்களால் ஏற்படும் தீமையான சூட்சும விளைவுகள்

(சூட்சும செயல்முறையை புரிந்து கொள்ள முறையே - 1,1அ, 2, 3, 3அ, 3ஆ, 3இ, 3 ஈ) குறிப்புகளைப் படிக்கவும்




சுற்றுச் சூழலிலிருந்து கஷ்டம் தரும் சக்தியை ஈர்க்கின்றன கஷ்டம் தரும் சக்தியின் வளையம் ஆழ் மனதில் (சித்தம்) செயல்படுத்தப்படுதல் அஹம்பாவம் மற்றும் குறைபாடுகளின் காரணத்தினால் இதய சக்கரத்திற்கும் (அநாஹத சக்கரம்), எண்ணங்களின் காரணத்தினால் புருவ மைய சக்கரத்திற்கும் (ஆக்ஞா சக்கரம்) கஷ்டம் தரும் சக்தியின் ஓட்டம் கஷ்டம் தரும் சக்தி அந்நபரிடமிருந்து சுற்றுச்சூழலுக்குள் பாய்ந்து ஆன்மீக ரீதியாக சுற்றுச்சூழலை மாசுபடுத்தல்.

ஆன்மீக நிலையில் ஏற்படும் எதிர்மறையான தாக்கத்தால் மனோரீதியாகஅல்லது உடல் ரீதியாகவும் நாம் பாதிப்பு அடையலாம் உதாரணத்திற்கு ஒருவர் அதிக எதிர்மறை எண்ணங்களை பெறலாம் அல்லது அவருக்கு குமட்டல் உண்டாகலாம்.

யோயா அவர்கள் கண்டறிந்த மற்றொரு விஷயம் என்னவென்றால், சுயநலம், மற்றவர்களை குற்றம் காணும் மனப்பான்மை, மரியாதை இல்லாமை, பகட்டு போன்ற குறைபாடுகள் காரணமாக வசை சொற்களை பயன்படுத்தும் போது கடவுளுடனான தொடர்பு ஏற்படவில்லை. இதனால் தகாத வார்த்தைகளை பேசுபவர் பாவங்களுக்கு ஆளாகிறார். மேலும், அவரின் அஹம்பாவமும் அதிகரிக்கிறது.

எனவே தகாத சொற்களை முற்றிலும் தவிர்க்க பரிந்துரைக்கப்படுகிறது.

### 4. சத்தமாக பேசுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்த ஆன்மீக ஆராய்ச்சி

மற்றவர்களின் கவனத்தை கவர முயற்சிப்பது அல்லது வாதிட முயற்சிப்பதுபோன்ற காரணங்களால், ஒருவர் சத்தமாக பேசலாம். மற்றவர்களின் கவனத்தை கவர முயற்சிப்பது அஹம்பாவத்தின் அறிகுறியாகும். மேலும், வாதிடுவது மனதில் எதிர்மறையான எதிரெண்ணங்களை தூண்டி விடுகிறது. அஹம்பாவம் மற்றும் எதிர்மறை எதிரெண்ணங்கள் ஆகிய இரண்டும் கடவுளிடமிருந்து நம்மை விலக்கி மாயை நோக்கி இழுக்கின்றன. அவை ஆன்மீக ரீதியாக எதிர்மறையான அதிர்வுகளையும் உருவாக்குகின்றன.

இவ்வாறு நாம் சத்தமாக பேசுவதால் எதிர்மறை சக்திகள் (ஆவிகள், பேய்கள், பிசாசுகள் போன்றவை) நம்மை பாதிப்பது எளிதாகிறது. சத்தமாக பேசுவதை பழக்கமாக கொண்ட ஒருவர் ஆன்மீக கஷ்டங்களை அனுபவிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

சத்தமாக பேசுவதன் சூட்சும விளைவுகளைப் பற்றி திருமதி யோயா வாலே அவர்கள் தனது சூட்சும ஞானத்தின் மூலம் கண்டறிந்ததை கீழே பகிர்ந்துள்ளோம்.

உணர்வு வளையம் ஒன்று அநாஹத சக்கரத்தில் உருவாக்கப்படுகிறது. சத்தமாகபேசுவது அஹம்பாவத்தின் அறிகுறியாக இருப்பதால்,

அந்நபரைச் சுற்றி கருப்பு சக்தி உறை உருவாகுதல்

அந்நபரின் வாயை சுற்றி கருப்பு சக்தியின் வளையம் உருவாகி, அநாஹத சக்கரத்திலிருந்து வாய்க்கு கருப்பு சக்தியின் ஓட்டம் ஏற்படுகிறது.

கருப்பு சக்தி மற்றும் அதன் நுண்ணிய துகள்கள், அந்நபரின் வாயிலிருந்து சுற்றுசூழலிலும் உமிழப்படுகிறது. மற்றவர்களிடமிருந்து அதிகமாக எதிர்பார்ப்பதின் காரணமாக அந்நபரிடமிருந்து அஹம்பாவ அலைகள் உமிழப்படுகின்றன.

சுருக்கமாக கூற வேண்டும் என்றால்,சத்தமாக பேசுவதால் ஆன்மீக ரீதியாக தீங்கு விளைகிறது. எனவே சத்தமாக பேச வேண்டாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது. கேட்கும் திறன் குறைபாடு உள்ளவர்கள் இயல்பாகவே அதிக சத்தமாக பேசுவார்கள்.

அவர்களுடன் பேசுபவர்களும் கேட்கும் திறன் குறைபாடுள்ளவர்க்கு எளிதாக கேட்க வேண்டும் என மேலும் சத்தமாக பேசக்கூடும். இது போன்ற சந்தர்ப்பங்களில், ஆன்மீக ரீதியாக தீங்கான விளைவு எதுவும் இல்லை.

5. மெதுவாக பேசுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்த ஆன்மீக ஆராய்ச்சி

மெதுவாக பேசுவதனால் ஆன்மீகத்திற்கு உகந்த குணங்களாகிய கேட்கும் மனப்பான்மை, பணிவு மற்றும் உள்முக பார்வை போன்ற குணங்களை பெறுவதற்கு உறுதுணையாக உள்ளது. உள்முக பார்வை என்றால் உள்முக சிந்தனை, அதாவது கடவுளுடன் ஒன்றி இருப்பது என்ற நோக்கத்தை மனதில் கொண்டு நம்முடைய எல்லா செயல்களையும் செயல்படுத்துவது ஆகும். இந்த குணங்கள் நம்மை கடவுளின் அருகே ஈர்த்து ஆன்மீக பயிற்சி தடையின்றி நடக்க உதவுகிறது. எனவே, அவை நேர்மறையான ஆன்மீக அதிர்வுகளை உருவாக்குகின்றன.

மெதுவாக பேசுவதால் ஏற்படும் சூட்சும விளைவுகளை குறித்து, திருமதி யோயா வாலே அவர்களின் சூட்சும ஞானத்தின் மூலம் வரைந்த படத்தை கீழே பகிர்கிறோம். சூட்சும ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த வரைபடத்தின் துல்லியம் 80% ஆகும்.

சூட்சும ஞானத்தின் அடிப்படையில் வரையப்பட்ட படத்திற்கும் மற்றும் யோயாவின் அனுபவத்திற்கான விளக்கமும் பின்வருமாறு.

மற்றவர்களைப் பற்றி சிந்திப்பதாலும் மற்றும் அவர்களை மதிப்பதாலும் மெதுவாக பேசுவதால் அஹம்பாவம் குறைவாக இருக்கும்.

உணர்வுகளின் அதிர்வுகள் ஆக்ஞா சக்கரத்தின் மையத்தில் சிறிய அளவில் உருவாக்கப்படுகின்றன மற்றும் இயல்பாக பேசும் நபரிடமிருந்து சக்தியின் அதிர்வலைகளும் துகள்களும் வெளிப்படுத்தப்படுகின்றன.

முதன்மையான சக்தி தெய்வீக சைதன்யம் ஆகும். தெய்வீக சைதன்யத்தின் அலைகள் வாயிலிருந்து சுற்றுச்சூழலுக்குள் வெளியேற்றப்படுகின்றன.

அந்நபரைச் சுற்றி தெய்வீக சைதன்யத்தின் பாதுகாப்பு வளையம் உருவாகிறது. ஆக்ஞா சக்கரத்தின் மையத்தில் தெய்வீக சைதன்யம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

ஆகவே நாம் பெறும் ஆன்மீக பயன்கள் காரணமாக மெதுவாக பேசுவது பரிந்துரைக்கப்படுகிறது.

6. ஏன் மெதுவாக பேச வேண்டும் ஆன்மீக பரிமாணத்தின் பரிசோதனை

மெதுவாக பேசுவதன் நன்மைகளை நேரடியாக நீங்கள் அனுபவிக்க ஒரு சூட்சும பரிசோதனை செய்ய உங்கள் அனைவரையும் நாங்கள் ஊக்குவிக்கிறோம். தயவுகூர்ந்து சில நிமிடங்கள் கடவுளின் நாமஜபம் செய்துவிட்டு, பின்னர் சிறிது நேரம் மெதுவாக பேசுங்கள். நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பதை கவனியுங்கள், பின்னர் 12 நிமிடங்கள் கடவுளின் நாமஜபம் செய்யவும். பின்னர் சிறிது நேரம் சத்தமாக பேசிவிட்டு, நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பதை கவனியுங்கள். இந்த செயல்முறையை செய்வதன் மூலம், சத்தமாக பேசுவதற்குப் பதிலாக மெதுவாக பேசும்போது சூட்சும பரிமாணத்தில் என்ன நடக்கிறது என்பதை ஒருவர் அனுபவிக்க முடியும்.

ஒருவர் மென்மையாக பேசுவதாலும், தகாத சொற்களை தவிர்ப்பதாலும், அது நாமும், நம்மைச் சுற்றியுள்ளவர்களும் அதிக சாத்வீகமாக இருக்க உதவுகிறது.

நாமஜபம் போன்ற வழக்கமான ஆன்மீக பயிற்சியால், பாதுகாப்பான ஆன்மீக வளையம் நம்மை சுற்றி உருவாகி, மற்றவர்கள் சத்தமாக பேசுவதாலும் அல்லது தகாத சொற்களை பயன்படுத்துவதாலும் ஆன்மீக பரிமாணத்தில் உருவாகும் தீங்கு விளைவிக்கும் கூறுகளிலிருந்து நம்மை பாதுகாக்கின்றன.

(மேலும் விவரங்கலுக்கு
www.sanatan.org தொடர்பு: 9380949626

# இலட்சம் உரு ஏற்றினால் எந்த மந்திரமும் சித்தியாகும்




வசியம் வேண்டுபவர்கள் அகத்தியர் வாத சௌமிய சாகரத்தில் மந்திவாள் பகுதியில் குறிப்பிட்டுள்ள “ ஓம் ரீங் வசி வசி” என்னும் மந்திரத்தை கண்களை மூடி, உதடு அசையாமல் காலையிலும் மாலையிலும் வடகிழக்கு திசையை நோக்கி 108 முறை ஜெபிக்கவேண்டும்.

தரையில் விரிப்பின் மேல் அமர்ந்து ஜெபிக்க வேண்டும் இவ்வாறு தொடர்ந்து 90 நாட்கள் ஜெபித்தால் சர்வ வசியம் உண்டாகும்.

தனியாக ஒரிடத்தில் அமர்ந்து மன ஒருமைபாட்டுடன் அமர்ந்து ஜெபிக்க வேண்டும். பொதுவாக எல்லா மந்திரங்களும் ஜெபித்த உடனேயே பலன் தருவதில்லை ஒரு லட்சம் முறை உரு ஏற்றிய பின்னரே அவை வேலை செய்யத் தொடங்கும். மேலும் வசிய மந்திரத்தை ஜெபிக்கும்போது வாயின் வலது பக்கத்தில் ஒரு கிராம்பினை ஒதுக்கி வைத்துகொள்ள வேண்டும். ஆனால் எக்காரணம் கொண்டும் கடிக்கக்கூடாது. ஜெபம் முடிந்ததும் கிராம்பைத் துப்பிவிட வேண்டும். இது வசிய சக்தியை விரைவு படுத்த உதவும். வசியப் பிரயோகம் செய்தால் கண்ணுக்குத் தெரிந்த எதிரிகளும் தெரியாத எதிரிகளும் வசியமாகி விடுவார்கள். எதிரிகளின் எதிர்ப்பு அலைகளை மாற்ற நம் வசீகர சக்தியை அதிகரித்துக்கொள்ள வேண்டும். எந்த மந்திரமானாலும் எடுத்த உடனேயே பலனைத்தராது. மிகவும் கவனத்துடன் மந்திரத்தின் ஒலி மாறாமல் சிந்தனையை மந்திரத்தில் மட்டும் செலுத்தி இலட்சம் உரு ஏற்றினால் மந்திரம் சித்தியாகும்.

# கஜபூஜை செய்தால் மகிழும் மகாலட்சுமி !!!!

யானையின் மத்தகத்தில் (முன் நெற்றி) லட்சுமி குடியிருப்பதாக ஐதீகம். இதனால், தினமும் கோவில் நடை திறந்ததும் கருவறை முன், யானைக்கு பூஜை நடத்தி சன்னதியை சுற்றி வரச் செய்வர்.

இதற்கு ‘கஜ பூஜை’ என்று பெயர். யானையின் பிளிறல் ஓசை கேட்டு லட்சுமியின் மனம் மகிழும் என ‘ஸ்ரீசூக்தம்‘ என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. லட்சுமி அவதரித்ததும், பூமியை தாங்கும் எட்டுத்திசை யானைகளும் புனித தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து வணங்கின.

இவளை ‘கஜ லட்சுமி’ என்பர். ‘கஜம்‘ என்றால் ‘யானை’. கஜலட்சுமி சிற்பத்தை கோவில் கருவறை நுழைவு வாயிலிலும், வீட்டில் தலைவாசலிலும் அமைப்பது வழக்கம்.



# ஆன்மீக வழியில் அமைதி

ஒரு விதை பூமியில் விழுந்து செடியாகி சில வருடங்களில் மரமாக உயர்ந்து நிற்கிறது. ஆனால் அந்த மரம் சக்தியை இழந்து ஒரு காலத்தில் பட்டமரமாக கீழே விழுந்து விடுகிறது. அந்த மரம் திடீரென்று பட்டமரமாகி கீழே விழுந்து விடுவதில்லை. அது நாள்தோறும் கொஞ்சமாக கொஞ்சமாக தனது சக்தியினை இழந்து கொண்டுதான் வருகிறது. அது சக்தியை இழந்து வருவது நம்முடைய கண்களுக்குத் தெரிவதில்லை. அந்த மரத்தின் இலைகள் உதிர்ந்து மரம் பட்டுபோய் நிற்கும்போதுதான் அதன் சக்தியினை இழந்து விட்டது என்று நம் கண்களுக்குத் தெரிகிறது. அதேபோன்றுதான் மனிதனுடைய உடலும் வாழும் சக்தியை ஒவ்வொரு நாளும் அவனையும் அறியாமல் சிறிது சிறிதாக இழந்து கொண்டே வருகிறது.

அவன் நடக்க முடியாமல் உடல் தளர்வு அடையும்போதுதான் நாள்தோறும் சக்தியை இழந்துகொண்டு வந்திருக்கிறோம் என்று மனிதன் அப்போது உணர்கிறான். எனவே நமது ஆன்மிகம் மனிதர்களிடம் மனிதா! உனது உடல் ஆரோக்கியமான நிலையில் இருக்கும்போது தானதர்மங்களில் ஈடுபடு! உலகில் மனிதநேயத்துடன் உன்னுடைய செயல்பாடுகள் இருக்கும்படி பார்த்துக் கொள்! என்று வலியுறுத்திக் கூறுகிறது. உலகில் அழியாத ஒரே சக்தி நமது கண்ணுக்கும் காட்சிக்கும்கருத்துக்கும் அப்பாற்பட்டது பரம்பொருள் ஒன்றுதான். அதனை அறிந்து கொள்வதுதான் விவேகம் என்னும் ஆன்மீக அறிவு ஆகும். முழுமை பெறாத அறிவு அல்லது முற்றுப்பெறாத ஞானம் ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கிறது என்பதை வேதங்கள் சாஸ்திரங்கள் இதிகாசங்கள் கூறுகின்றன.

மனிதர்கள் மனதில் சர்வமும் அதாவது இவ்வுலகத்தில் இருக்கும் அனைத்துப் பொருள்களும் அழியக்கூடியது என்ற அறிவை ஞானத்தை நம் மனதில் நன்கு பதிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நம் மனதில் பதிந்து வைத்துக் கொள்ளும்போது உலகில் காணும் பொருட்கள் மீதோ அதன் மூலம் அடையக்கூடிய இன்பம் சுகம் மகிழ்ச்சியின் மீது நமக்கு பற்றுதல் வருவதில்லை. அவ்வாறு நம் மனதில் பற்றுதல் இல்லாமல் இருக்கும்போது நமக்குக் கிடைத்த பொருட்கள் மிகவும் கஷ்டப்பட்டு கிடைத்த உயர்ந்த பொருட்களாக இருந்தாலும், அவற்றை இழக்கும்போது அந்தப் பொருட்களினால் கிடைக்கக்கூடிய மகிழ்ச்சியை ஆனந்தத்தை சுகத்தை இழந்து விட்டாலும் அது குறித்து கவலை கொள்வதில்லை. அவ்வாறு இழந்த அந்த இழப்பினை நினைத்து நமது மனம் சிறிதும் வருத்தமோ துன்பமோ அடைவதில்லை. இந்த ஞானத்தினை அல்லது மனபக்குவத்தை ஆன்மிகம் மூலம்தான் அறிந்து பெற்றுக்கொள்ள முடியும். ஆன்மீக வழியில் இத்தகைய மன பக்குவத்தைப் பெற்று விட்டால் நமது வாழ்வில் மனஅமைதியைக் காணமுடியும்.

இந்த உலகம் ஒரு மாயத்தோற்றமே. அது நிரந்தரம் அல்ல என்பதை நாம் வாழ்வின் ஆரம்பத்தில் உணர்ந்து கொண்டால், நாம் தேடும் விரும்பும் மனஅமைதி கிடைக்கும். இந்த உலகில் காணப்படும் பொருள்கள் அவற்றின் மூலம் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி ஆனந்தம் சுகம் அனைத்தும் நித்தியமானது நிரந்தரமானது அழிவில்லாதது என்று நம் மனதில் நம்மையும் அறியாமல் தவறாக பதிந்து விட்டது. அவ்வாறு நம் மனதில் பதிந்துவிட்ட ஒரு பொருள் நம்மை விட்டுப் போனவுடன் அந்தப் பொருளினால் வரக்கூடிய இன்பம், மகிழ்ச்சி, சுகத்தை பற்றி மட்டும்தான் நினைக்கிறோம். மேலும் அந்தப் பொருளின் மூலம் வரக்கூடிய இன்பம் நம்மிடம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்றும் ஆசைப்படுகிறோம். ஒரு

21

www.aanmeegamalar.com

பொருள் நம்மிடம் இருக்கும்போது அதன்மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியை சுகத்தை நன்கு அனுபவிப்போம். ஆனால் அந்த இன்பத்தைப்பற்றி ஒருகணம்கூட நமது மனம் அப்போது சிந்தித்துப் பார்ப்பதில்லை.

எடுத்துக்காட்டாக ஒரு சிறுகத்தியை எடுத்துக்கொள்வோம். அந்தக் சிறு கத்தியினால் ஆப்பிள் பழத்தின் தோலை நீக்கி, பழத்தை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி அவற்றை நாம் ருசித்து சாப்பிட்டு இருப்போம். சிறுகத்திதானே என்று அலட்சியமாக வீட்டில் ஏதோ ஓரிடத்தில் தூக்கிப் போட்டு இருப்போம். அந்த சிறுகத்தி தொலைந்து விட்டாலோ அல்லது ஒடிந்து போய்விட்டாலோ அதன் முக்கியத்துவத்தை அதன் பயன்பாடுகள் பற்றி அப்போதுதான் நன்கு உணர்கிறோம். அதேபோன்றுதான் நம்மிடமிருந்த ஒரு பொருளை இழந்தபின்தான் அதாவது அந்தப் பொருளினால் நாம் அனுபவித்த இன்பத்தை உணர்கிறோம். அதாவது அந்தப் பொருள் நம்மை விட்டு சென்றது பற்றி அதன் அருமை பற்றி அப்போது நமக்கு தெரிய வருகிறது. உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் அதன் மூலம் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி ஆனந்தம் அனைத்தும் அழிந்து விடும் என்று அப்போது நினைத்துக்கொண்டு நமது மனம் ஆறுதல் அடைவதில்லை.

ஆரோக்கியமான நமது உடல்கூட ஒருநாள் அழிந்து விடும். உடல்



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

ஆரோக்கியமாக இருந்தபோதிலும் காலம் என்று ஒன்று இருக்கிறது. காலங்கள் கடந்த பின் நமக்கு முதுமை இறப்பு போன்றவை இருக்கிறது. இவற்றையெல்லாம் எண்ணி வாழும்போது நமது மனம் வாழ்வில் எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளும் (take it easy). மனித வாழ்க்கை எத்தகையது என்பது பற்றி புத்தர் வரலாற்றில் ஒரு காட்சி. போதி மரத்தடியில் ஞானம்பெற்ற புத்தர் அரண்மனையில் சித்தார்த்தன் என்ற இளவரசனாக இருக்கும்போது வெளியுலகம் எப்படி இருக்கும் என்பதுபற்றி அறியாமல் அரண்மனையில் சுகமாக ஆனந்தமாக 'துன்பம் என்றால் என்ன' என்பது கூட அறியாமல் இருந்தான்.

ஒருமுறை அரண்மனையை விட்டு இளவரசன் சித்தார்த்தன் வெளி உலகைக் காண்பதற்கு ஆசைப்பட்டு ரதத்தில் வெளியே உலாவதற்கு வந்தான். அப்போது அவன் வெளியே கண்ட காட்சிகள் சித்தார்த்தன் என்ற இளவரசனை சிந்திக்க வைத்தது. அவன் உலாவதற்கு வரும்போது ஒரு இளைஞன் மகிழ்ச்சியுடன் வேகமாக ஆரோக்கியமாக நடந்து சென்று கொண்டிருந்தான். அதனைப்பார்த்து விட்டு சித்தார்த்தன் மிகவும் மகிழ்ந்தான். அந்த இளைஞனை பார்த்து உலகம் என்றால் ஆனந்தம் மகிழ்ச்சி நிறைந்தது என்று மனதில் அப்போது நினைத்து ஆனந்தம் கொண்டான்.

இளவரசன் சித்தார்த்தன் ரதத்தில்



சிறிது தூரம் சென்றபின் ஒரு முதியவர் ஊன்றுகோலுடன் முதுகு வளைந்து கஷ்டப்பட்டு நடந்து சென்று கொண்டிருந்தார். இதனைப் பார்த்த சித்தார்த்தன் மனம் துணுக்குற்றது. அவன் அருகில் இருந்த அமைச்சரிடம் ''அந்தப் பெரியவர் ஏன் ஊன்றுகோலுடன் நடந்து செல்கிறார்'' என்று காரணம் கேட்டான். அதற்கு அமைச்சர் அந்த பெரியவர் வயதாகி முதுமைநிலை அடைந்து விட்டார். அதனால் நடக்க முடியாமல்தான் அவர் ஊன்றுகோல் உதவியுடன் நடந்து செல்கிறார். இவரைபோல் உலகில் பிறந்த அனைத்து மனிதர்களும் முதுமையை அடைவார்கள் என்ற விளக்கத்தையும் அமைச்சர் கூறியவுடன் சித்தார்த்தன் அப்போது சிந்திக்கத் தொடங்கினான்.

ஒரு மனிதன் தன்னோட வாழ்நாளெல்லாம் ஆரோக்கியமான உடலுடன் ஆனந்தமாக இருக்க முடியாதா என்பதைபற்றி அவன் சிந்திக்க ஆரம்பித்தான். இன்னும் சிறிது தூரம் ரதம் நகர்ந்தவுடன் ஒரு காட்சியை சித்தார்த்தன் கண்டு மீண்டும் அதிர்ச்சி அடைந்தான். இறந்த ஒருவரின் உடலை நான்குபேர் சுமந்து செல்வதை கண்டான். இதுபோன்ற காட்சிகளை அரண்மனைக்குள் இருக்கும்போது இதுவரை இளவரசன் சித்தார்த்தன் பார்த்ததில்லை. இளவரசன் சித்தார்த்தன் துன்பம் என்றால் என்ன என்பது பற்றி இதுவரையில் உணர்ந்ததுமில்லை கேட்டதுமில்லை பார்த்ததுமில்லை. அவன் அமைச்சரிடம் விளக்கம் கேட்டான். அதற்கு அமைச்சர் இறந்தவரின் உடலை புதைப்பதற்காக சுமந்து செல்கிறார்கள் என்றார். இறப்பு என்ற காட்சியை சித்தார்த்தன் இதுவரையிலும் பார்க்காததால் இறப்பு என்றால் என்ன என்று கேட்டான். அதற்கு அமைச்சர் உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் வயதாகி முதுமைநிலை அடைந்து நோய்வாய்ப்பட்டு, துன்பப்பட்டு அவன் உடல் வருந்தி இறந்து விடுவான் என்று விளக்கம் கொடுத்தார்.

இளவரசன் சித்தார்த்தன் அரண்மனைக்கு வந்து தனியாக அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்துகொண்டு, தான் ரதவீதியில் கண்ட காட்சிகளை திரைப்படம்போல் ஒன்றன்பின் ஒன்றாக தன்னோட மனத்திரையில் ஓடவிட்டான். தன்னோட சிந்தனையையும் அதன்பின்னால் ஓடவிட்டான். ஒரு மனிதனுக்கு பிறப்பு, இளமை, முதுமை, நோய்நொடிகள், இறப்பு என்ற நிலைகள் இருக்கும் என்பதை இளவரசன் அப்போது அறிந்து உணர்ந்து கொண்டான். மனிதன் பிணி, முதுமை இறப்பு இவற்றிலிருந்து விடுதலை பெற்று மனம் அமைதி அடைவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சித்தார்த்தன் சிந்திக்க தொடங்கினான். தன்னுடைய உள்ளத்தில் தோன்றிய கேள்விக்கு பதிலை முடிவைத் தேடித்தான் அரண்மனை சுகத்தை விட்டு வெளியே வந்தார். இளவரசன் சித்தார்த்தன் பிற்காலத்தில் புத்தராக போதிமரத்தடியில் ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்ற ஞானம் பெற்றார் என்பது வரலாறு.

இந்த உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் மனிதன் உட்பட நித்தியமல்ல என்பதை புத்தர் கண்ட காட்சிகள் நமக்கு அறிவுறுத்தும் பாடங்கள் ஆகும். நமக்கு விவேகம் இருந்தால்தான் இதனை ஆன்மீக அறிவு கொண்டு அறிந்து கொள்ள முடியும். இந்த விவேகம் ஒவ்வொரு மனிதனிடமும் முழுமையாக இல்லை என்றாலும் சிறிதளவாவது இருக்கும். அதனால்தான் அவன் ஆன்மீகத்தில் நாட்டம் கொள்கிறான். ஒவ்வொரு மனிதனும் அவனிடம் இருக்கும் பொருட்கள் அனைத்தும் நிரந்தரமாக இருக்கும் என்று அவனை அறியாமல் நினைத்துக்கொண்டு இருக்கிறான். அந்த நினைவிலிருந்து முதலில் நாம் வெளிவரவேண்டும். அதாவது உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் அநித்தியமானவை என்று முடிவுக்கு வந்து நித்தியமான பொருளை நாடவேண்டும். இதனை அறிந்து உணர்ந்து கொள்வதற்கு ஆன்மீகம் விவேகத்தை கொடுத்து, நம்மை அமைதி வாழ்வுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்கிறது.

ஒரு நண்பர் நம்மிடம் நன்கு சிரித்துப் பேசிப்பழகிகொண்டிருந்தவர் திடீரென்று காரணம் இல்லாமல் நம்மிடம் பேசாமல் இருந்துவிட்டால் நமது மனம் நம்மை அறியாமல் வருத்தம் துயரம் கொள்கிறது. இந்த உலகில் காணப்படும் பொருள்கள் அனைத்தும் அப்படியே அழிவில்லாமல் இருக்க வேண்டும் என்று நம்மையும் அறியாமல் நினைக்கிறோம். அவைகள் எவ்வித மாற்றமும் இல்லாமல் இருக்க வேண்டும் என்றும் நினைக்கிறோம். ஆனால் இந்த இயற்கை ஒரு காலத்தில் தன்னோட நிலையிலிருந்து மாறும் அல்லது அழிந்து விடும்.

உலகில் காணும் இயற்கை பற்றி யாரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. உலகில் ஒரு பொருள் அநித்தியம் என்று நன்கு தெரிந்திருந்தாலும் அப்பொருள் மூலம் வரக்கூடிய இன்பத்தின் மீது நம்மை அறியாமல் பற்றுதல் ஆசை அதன்மீது வைத்து விடுகிறோம். இத்தன்மையை நம் மனதை விட்டு முற்றிலும் நீக்கவேண்டும்.

நமது விவேகத்தின் மூலமாகத்தான் இத்தகைய ஞானத்தினை பெற முடியும். ஆன்மீக அறிவினால்தான் நாம் அமைதியான வாழ்வை பெறுவதற்கு முடியும்.

உலகில் காணும் பொருட்கள் அனைத்தும் அநித்தியம் என்று அறிந்து கொண்டால் மனதில் நன்கு பதிந்து விட்டால், நாம் உலகில் காணும் பொன்பொருள்களை மென்மேலும் சேர்த்து குவிப்பதற்கு ஆசைப்பட மாட்டோம். அவ்வாறு ஆசையில்லாமல் இருந்தால், நாட்டில் கொலை கொள்ளை போன்ற தீய செயல்கள் நடைபெறாது என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஓரளவு பணம் வைத்துக்கொண்டு இருந்தாலும் மென்மேலும் பணத்தை சம்பாதித்துக் கொண்டிருக்கிறோம். நாம் பணத்தை அளவுக்குமீறி சேர்ப்பதுபோல் நம்மிடம் இருக்கும் சிறிது அறிவை வைத்துகொண்டு மேலும் நமது அறிவை எந்தவழிமுறையிலாவது பெருக்கி கொள்ள வேண்டும் என்று யாரும் நினைப்பதில்லை. நாம் தியானம் யோகாசனம் போன்ற பயிற்சிகளை மேற்கொண்டு உடல் ஆரோக்கியத்தை பெறுவதுபோல் ஞானத்தை அடையஅடைவதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் விவேகம் என்னும் அறிவு அடிப்படையாகத் தேவைபடுகிறது.

நாம் நம்மிடையே உள்ள மூச்சுக் காற்றை கவனித்துக் கொண்டேயிருந்தால் ஞானம் பெற முடியும் என்று சித்தர்கள் எளிய வழிமுறையும் கூறியிருக்கிறார்கள். மனிதனுக்கு ஞானம் வந்து விட்டால் நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும். ஒரு மனிதன் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது தன்னையே மறந்து விடுகிறான். அதாவது ஐம்புலன்களும் ஆழ்ந்த உறக்கத்தில் அடங்கி விடுகிறது. கண்ணுக்கு பார்க்கும் சக்தி இருந்தாலும் ஆழ்ந்த உறக்கத்தில் நாம் கண்களால் பார்க்க முடிவதில்லை. அதேபோல் காதுகளுக்கு கேட்கும் சக்தி இருந்தாலும் ஆழ்ந்த உறக்கத்தில் காதுகளால் கேட்க முடிவதில்லை. நாக்கு சுவையை உணரும் சக்தி இருந்தாலும் ஆழ்ந்த உறக்கத்தில் நாவினால் சுவையை உணர முடிவதில்லை. தோல் தொடும் உணர்வை பெற்றிருந்தாலும் ஆழ்ந்த உறக்கத்தில் தொடும் உணர்வை உணர்ந்து கொள்ள முடிவதில்லை. நாசி வாசனைப்பொருட்களின் நறுமணத்தை ஆழ்ந்த உறக்கத்தில் நுகர முடிவதில்லை. மனிதனுடைய ஆழ்ந்த உறக்கத்தில் கண், காது, நாசி போன்ற அவையங்கள் இயங்குவதில்லை.

ஆனால் ஆழ்ந்த உறக்கத்தில் காற்று மட்டும் மனித உடலில் நாசியின் வழியே உள்ளே வெளியே இடைவிடாது சென்று வருகிறது. அவ்வாறு காற்று நாசித்துவாரங்களின் வழியே உடலில் உள்ளே வெளியே சென்று வருவதையும் மனிதன் தனது ஆழ்ந்த உறக்கத்தில் உணர்ந்து கொள்வதற்கு முடிவதில்லை. எனவே அத்தகைய மூச்சுக்காற்றை பரம்பொருளாக நினைத்து சித்தர்கள் பாடியிருக்கிறார்கள். எனவே நமது உடலில் நாசி வழியே உள்ளே வெளியே சென்று வரும் மூச்சுக் காற்றை கவனித்துகொண்டே வந்தால் நமது மனம் ஒருமைப்படும். இது ஒருவகை தியானமுறை என்று சித்தர்கள் ஞானிகள் கூறியுள்ளார்கள். நாம் மூச்சுப்பயிற்சி செய்வதன் மூலம் நாம் தேடும் விரும்பும் மனஅமைதியை பெறுவதற்கு முடியும்.

இந்த உலகம் நிகழ்காலம், இறந்த காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களில்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. நம்மில் பெரும்பாலானோர் கடந்த காலத்தினை எண்ணிக்கொண்டு வீணாகக் கவலைப்பட்டுக்கொண்டு இருப்பார்கள் அல்லது எதிர்காலத்தினை நினைத்து பயந்துகொண்டு இருப்பார்கள். கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் நினைத்துக்கொண்டு இருப்பவர்கள் ஒருபோதும் அவர்கள் விரும்பும் தேடும் அமைதியை பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. மனிதன் நிகழ்காலத்தினை எண்ணி வாழ்ந்தால்தான் அவன் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும். எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் அரசு பணியில் சேர்வதற்குரிய தேர்வு எழுதி தோல்வி அடைந்து விட்டான் என்று வைத்துக்கொள்வோம். அவ்வாறு அவன் தேர்வு எழுதி தோல்வி அடைந்ததைப் பற்றி நினைத்துக் கொண்டே இருந்தால் அதனால் அவனுக்கு என்ன பயன் ஏற்படும். அவனுக்கு மன அமைதிதான் கெடும். அவன் வாழ்வில் முன்னேற்றம் காண முடியுமா?

(அமைதி தொடரும்)

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

மொபைலில் ஆன்மிகமலரை முழுவதும் படிக்க

Google Play Store
**aanmeegamalar**
டவுன்லோடு செய்து




நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் ஏதுமில்லை

Subscribe MONEY

இதழ் முழுவதும் இலவசமாக படிக்கலாம்...

Google Play